வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 16.12.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 08 | பக்கங்கள் : 16

# நாங்கள் பொறுமையை இழக்கின்றோம்! ஐ. எம். எவ்., சகாக்களுக்கு கூறியுள்ளோம்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, டிசெ. 16

சர்வதேச நாணய நிதியத்துக்கும் (ஐ. எம். எவ்.) - எமது சர்வதேச சகாக்கள் - எங்கள் இரு தரப்பு நண்பர்களுக்கும் நாங்கள் பொறுமையிழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை தெரிவித்துள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளார்.

இலங்கையர்களின் நன்மைக்கும் உலகப் பொருளாதாரத்தின் நன்மைக்கும் இது அவசரமான விடயம். இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிக்கு அப்பால் அடுத்த வருடம் சர்வதேச அமைப்புகளிடம் இருந்து 5 பில்லியன் டொலர் கடன்களை எதிபார்க்கின்றது என்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டருக்கு அளித்த நேர் காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரச சொத்துக்களை மறுசீரமைப்பிற்கு உட்படுத்துவதன் மூலம் 300 கோடி டொலர் வரை திரட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஏழு தசாப்தங்களில் இலங்கை சந்தித்துள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி எரிபொருள் உணவு தட்டுப்பாடுகளுக்கு வழி வகுத்தது. இதன், காரண

15

# ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் ஜனாதிபதிக்கு விலக்களிப்பு!

## நீர்கொழும்பு நீதிமன்றம் அளித்தது

கொழும்பு, டிசெ. 16

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான உயிர்த்த ஞாயிறு இழப்பீடு வழக்குகளை அவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் காலப்பகுதியில் முன்னெடுக்காதிருக்குமாறு நீர்கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி நுவன் தாரக்க ஹனட்டிகல நேற்று உத்தரவிட்டார்.

அரசமைப்பின் 35/1 சரத்தின் ஏற்பாடுகளுக்கு

15

# தேர்தலில் தனித்து கேட்பதா?

# வெறுமனே தேர்தல் வெற்றிக்காக கூட்டமைப்பு பிளவுபட்டு நிற்காது!

## புளொட், ரெலோ கட்சிகள் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

வெறுமனே தேர்தல் வெற்றிக்காக உள்ளூராட்சி தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகள் தனித்து சந்திக்க மாட்டாது. இது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக கூடி ஆராய்ந்தே முடிவு எடுக்கப்படும். அது தமிழினத்தின் நன்மைகளை பாதிக்காததாக இருக்கும் என்று புளொட் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

15

# மருத்துவர்களின் ஓய்வு வயதெல்லை 63ஆனது!

கொழும்பு, டிசெ. 16

மருத்துவர்கள் ஓய்வு பெற வேண்டிய கட்டாய வயது எல்லையில் திருத்தங்களை மேற்கொண்டு பொது நிர்வாக அமைச்சால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய விசேட மருத்துவ நிபுணர்கள் பல் மருத்துவர்கள் மற்றும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவர்களின் ஓய்வு பெறும்

15

# 17 அரச நிறுவனங்களை மூடுவதற்கு ஆலோசனை!

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16

நாட்டில் இயங்கி வரும் 2,200 அரச நிறுவனங்களில் 17 நிறுவனங்கள் உற்பத்தி திறன் இல்லாத - பெயரளவிலான நிறுவனங்களாக விளங்குவதால் அவற்றை மூடுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார ஸ்திரப்படுத்தல் தேசிய உப குழு மூலமாக தெரிய வந்துள்ளது.

மேலும் 52 அரச நிறுவனங்கள் மூலோபாய ரீதியாக பலப்படுத்

15

# பாடசாலைகளில் போதை ஒழிப்பு முப்படைகளை இணைத்து திட்டம்!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 16

ஐஸ் போதைப்பொருள் உட்பட அபாயகரமான போதைப்பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாப்பது சவால் மிக்கதாக உள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, பொலிஸ் மற்றும் முப்படையினரை ஒன்றிணைந்து போதைப் பொருள் ஒழிப்பு செயல்திட்ட நடவடிக்கை முன்னெ

15

# விபத்தில் முதியவர் பலி!

முல்லைத்தீவு, டிசெ. 16

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீதியால் சென்ற முதியவரை மோதித் தள்ளியதில் அவர் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - விசுவமடு ரெட்பானாவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இறந்தவரின் சடலம் தருமபுரம் மருத்துவமனையில் இறந்தவரின்

15

# கோட்டாபயவை பதவியிலிருந்து விரட்டி ஜனாதிபதியாவதற்கு பஸில் திட்டமிட்டார்!

## வெளிப்படுத்தினார் உதய கம்மன்பில

கொழும்பு, டிசெ. 16

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அந்த நெருக்கடியை மேலும் பெரிதாக்கவே பஸில் ராஜபக்ஷ திட்டம் தீட்டினார். கோட்டாபயவை விரட்டி பாராளுமன்றம் ஊடாக தான் ஜனாதிபதியாகும் திட்டத்திலேயே பஸில் செயல்பட்டார்" - என்று பிவித்திரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

"கோட்டாபயவின் ஆட்சியில் தோன்றிய பொருளாதார நெருக்கடி உக்கிரமடையாமல் தடுப்பதற்குப் போதுமான வாய்ப்பு இருந்தது. ஆனால், பஸில் அதைச் செய்யவில்லை.

15

# 4 வயது சிறுவனின் வாயில் சூடு வைத்த ஆசிரியர்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

முன்பள்ளியில் கற்கும் 4 வயது சிறுவனுக்கு ஆசிரியர் வாயில் நெருப்பால் சுட்டார் என்று சங்கானை பிரதேச செயலக சிறுவர் விவகார பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை - துணவி பகுதியிலுள்ள முன்பள்ளியை சேர்ந்த ஆசிரியர் ஒருவரே தீக்குச்சியால் சிறுவனின் நாடியிலும், வாயிலும் சுட்டார் என்று சிறுவனின் பெற்றோர் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவன் யாழ்ப்பாணம்

15

## இப்படியும் நடக்கிறது...!

நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தாலும், இந்த அதிகாரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு இனப்பிரச்னைக்கு அவரால் மட்டுமே தீர்வைப் பெற்றுத்தந்துவிட முடியாது என்பது தெரிந்ததுதான்.

எத்தகைய தீர்வைக் கொண்டுவருவதென்றாலும் அது பாராளுமன்றத்தின் ஊடாகவே கொண்டுவரமுடியும்.

அதிகம் ஏன், ஏற்கனவே அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவதென்றாலும் அந்த பதின்மூன்றிலிருந்து பின்னர் பிடுங்கி எடுக்கப்பட்ட சில அதிகாரங்களை மீண்டும் ஓர் அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாகவே கொண்டு வரமுடியும்.

அவ்வாறு கொண்டுவரும்போது - அதுவும் சிலரால் நீதிமன்றில் கேள்விக்கு உட்படுத்தப்பட்டால் அப்போதைய நீதிமன்றம் என்ன தீர்ப்பை வழங்குகின்றதோ அதுவே தீர்ப்பு.

சிலவேளை பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதற்குக்கூட சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டிவரலாம்.

ஆனால், இப்போது இருக்கின்ற பதின்மூன்றின் கீழான மாகாண சபைகளுக்கு உடனடியாக தேர்தல் நடத்தி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபைகளை இயங்கச் செய்வதால், விக்னேஸ்வரன் சொல்வதுபோல காணிகள் அபகரிப்பு போன்ற சில விடயங்களையாவது தடுக்கலாம்.

அப்படி மாகாண சபைகளின் தேர்தல்களை உடனடியாக நடத்துவதென்றால்கூட பாராளுமன்றில் சாதாரண பெரும்பான்மையுடன் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும். பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் ஒன்றை பாராளுமன்றில் கொண்டுவர வேண்டியிருக்கும். இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான நகல் வடிவம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தன்னிடம் தயாராகவே இருக்கின்றது என்று சுமந்திரனும் முன்னர் ஒரு தடவை கூறியிருக்கிறார்.

நாம் இங்கே சொல்ல வருவது, அரசியலமைப்பில் தற்போது இருக்கும் சட்டங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று தமிழ் தேசியக் கட்சிகள் கோரிக்கை விடுத்தது அதிலுள்ள பதின்மூன்றை அமுல்படுத்த வேண்டும் என்பதை என்றே கருதுகின்றோம்.

ஜனாதிபதி இனப் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கான பேச்சு என அறிவித்திருந்தாலும் அது நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான கூட்டம் என்றே உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டது.

அதாவது, ஜனாதிபதி உண்மையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்புகின்றார் என்றால், அதற்காக அவர் அடுத்த பெப்ரவரி நான்காம் திகதியை காலக்கெடுவாகவும் அறிவிக்கின்றார் என்றால், அந்த காலக்கெடுவுக்குள் அவரால் செய்யக்கூடிய ஒன்றை செய்துகாட்டுங்கள் என்று அவருக்கு கெடு விடுப்பதை விடுத்து, இரண்டு மாதங்களுக்குள் செய்யமுடியாத விடயங்களை முன்நிபந்தனையாக விதிப்பது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

அதிகம் ஏன்? பாராளுமன்றத்தில் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த தயாராக இருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்தபோது, மகிந்தவும் பதின்மூன்று பிளஸுக்கு தான் இப்போதும் தயாராக இருப்பதாகக் கூறினார்.

மற்றவர்களிடம் நீங்கள் ரெடியா...? நீங்கள் ரெடியா...? என்று கேள்வி கேட்ட ஜனாதிபதி, தான் எதற்கு ரெடி என்று எங்கும் சொன்னதாகத் தெரியவில்லை. மாவட்ட அபிவிருத்தி சபைகளை (அவர் சொல்வதுபோல மாவட்ட அபிவிருத்தி குழுக்கள்) அமைப்பதற்கு தான் ரெடி என்று ஒருதடவை கூறினாரே தவிர, வேறு எதனையும் அவர் பகிரங்கமாக இதுவரை அறிவிக்கவில்லை.

அவரின் முழு அக்கறையும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலேயே இருக்கின்றது என்பதும் முழு நாட்டுக்கும் தெரிந்த சங்கதிதான்.

அவர் இந்த பேச்சு மூலம், தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதைவிட எதிரணியினர் இந்த விடயத்தில் அதிகபட்சம் என்ன அதிகாரத்தை வழங்க தயாராக இருக்கின்றார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டவே அதிகம் அக்கறை காட்டுவார் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே.

அடுத்துவரும் ஜெனிவாவை எதிர்கொள்ளவும், சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளை நாட்டில் நல்லெண்ணம் ஏற்பட்டுவிட்டது என்று காட்டி அதன்மூலம் அவர்களை திருப்திப்படுத்தவும் வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

தனது ஆட்சிக்கு முழுமையான முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொதுஜன பெரமுனகாரர்களின் கோரிக்கையை - அவர்களில் சிலரை அமைச்சர்களாக நியமிப்பதையே ஐந்து மாதங்களுக்கு இழுத்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதிக்கு - இந்தப் பேச்சை எதவித சிக்கலும் இல்லாமல் நடாத்திச் செல்வதில் சிரமம் இருக்காது என்றே அவரை அறிந்தவர்கள் நம்புகின்றனர்.

- ஊர்க்குருவி

# நாணய நிதியத்தின் ஒப்புதல் அடுத்த வருட தொடக்கத்தில்!

கொழும்பு, டிசெ. 16

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதல் டிசெம்பர் மாதம் கிடைக்காதென்றும் அடுத்த வருட ஆரம்பத்தில் அதனை பெற்றுக்கொள்வதற்காக செயற்பட்டு வருவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த ஒப்பந்தத்துக்கு சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் வழங்குமென செப்ரெம்பரில் அரசாங்கம் கூறியிருந்தது.

இருந்தாலும், கடந்த மாதங்களில் இதற்கான முன்னேற்றம் மெதுவாக இருந்ததால் ஜனவரி வரை நீடிக்கலாமென அவர் கூறினார். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாந்தை மக்களுக்கு உலருணவு!

வடமராட்சி, டிசெ. 16

மன்னார் - மாந்தை மேற்கு மக்களுக்கு வடமராட்சி - தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான அத்தியவசிய உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டன.



ராணி மைந்தன் குமரன் நற்பணி மன்றத்தின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்டம் - மாந்தை மேற்கு பிரதேச நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட அடம்பன்தாழ்வு, பரப்புக் கடந்தான், காத்தான் குளம், பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், ஆலங்குளம் ஆகிய பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு இந்த உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உதவியை காத்தான்குளம் கிராம சேவையாளர் பிரிவில் தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள், மற்றும் தொண்டர்களால் வழங்கப்பட்டுள்ளது. இதில் கிராமசேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் மதகுருமார்கள் மற்றும் பயனாளிகள் பங்கேற்றனர். (ஐ-02)

# ‘தென் யாழ்ப்பாணம்’ நூல் நேற்று வெளியிடப்பட்டது



யாழ்ப்பாணம், டிசெ. 16

கலாபூஷணம் சி. சிவதாசன் எழுதிய ‘தென் யாழ்ப்பாணம்’ நூல் வெளியீடு நேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி ராஜ மல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ. வரதீஸ்வரன் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைத்துறை சார் ஈடுபாடுடையோர் , பிரதேச செயலக அலுவலகர்கள் , சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கொண்டனர். (ஐ)

# டயானாவுக்கு வெளிநாட்டு பயணத்தடை 5 நாள் நீக்கம்

கொழும்பு, டிசெ. 16

குடிவரவு குடியகல்வுச் சட்டத்தை மீறிக் கடவுச்சீட்டு தயாரித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை தளர்த்தி, ஐந்து நாட்களுக்கு வெளிநாடு செல்ல கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க நேற்று அனுமதியளித்துள்ளார்.

டயானா கமகே சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, தனது வாடிக்கையாளருக்கு சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பாவுக்கு பயணம் மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ள தால், ஐந்து நாட்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையை தளர்த்து மாறு கோரிய கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப் பித்துள்ளார்.

இதன்படி, டயானா கமகேயின் வெளிநாட்டு பயணத் தடையை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையிலும், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கும் நீக்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 16

திருமறைக் கலாமன்றம் நடத்தும் ‘திருமகனே தாலேலோ’ என்னும் கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல. 286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப. யோ.ஜெபரட்ணம் அடிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் தேவாலயங்களில் பாடகர் குழாம்களும் இணைந்து கரோல் கீதங்களை வழங்கவுள்ள இந்நிகழ்வில் கத்தோலிக்க தேவாலயப் பங்குகளான யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம், புனித பரலோக அன்னை ஆலயம், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம், நல்லூர் புனித ஆசீர் வாதப்பர் ஆலயம், மாகியப் பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம் மற்றும் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் யாழ்ப்பாணம் நகர்பணி என் பன பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளன.

இந்த நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

Eelanadu
16.12.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 30

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கஜேந்திரகுமாரிடமுள்ள மாற்று வழி என்ன?

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஜனாதிபதி. இதில் எவருக்குமே சந்தேகங்கள் இருக்காது. ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வைக் காணப்போவதாகக் கூறுகின்றார். அவர் எவ்வாறான உள்நோக்கங்களையும் கொண்டிருக்கலாம் - அது வேறு விடயம். ஆனால், அவரோ பேசுவதற்கு கட்சிகளை அழைக்கின்றார். கூட்டமைப்பும் பங்குகொண்டு அதன் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றது. இதில் பங்குகொள்ளாமலும் விடலாம். அவ்வாறாயின், அடுத்த கட்ட வேலைத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அவ்வாறானதொரு வேலைத்திட்டம் எவரிடமும் இல்லை.

எவ்விதமான நிபந்தனையும் இல்லாமல் பேச்சில் பங்குகொண்டமையானது துரோகமென்று கஜேந்திரகுமார் வாதிடுகின்றார். விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தோடு கூட்டமைப்பை ஒப்பிட்டிருக்கின்றார். முதலில் இது ஒரு பேச்சே அல்ல. இங்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்களுக்கான இறுதித் தீர்வு தொடர்பில் பேசப்படவுமில்லை. பேச்சு தொடர்வதாயின் அரசாங்கம் அதன் நம்பகத் தன்மையை நிரூபிக்க வேண்டுமென்னும் வகையிலேயே பேசப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பு முன்னெடுக்கும் ஒவ்வொரு விடயங்களையும் எதிர்ப்பதன் மூலம் தங்களின் தேர்தல் அரசியலை முன்னெடுப்பதையே கஜேந்திரகுமார் பிரதான அரசியலாகக் கொண்டிருக்கின்றார். ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியபோதும்கூட, அதற்கு எதிரான பிரசாரங்களையே முன்னெடுத்திருந்தார். அதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு தங்களின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸை எதிர்த்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் எவ்வாறு செயல்பட்டாரோ அவ்வாறானதோர் அணுகுமுறையையே இப்போது கஜேந்திரகுமார் முன்னெடுத்து வருகின்றார். இது ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி அரசியல் அணுகுமுறை போன்ற ஒன்றாகும். கூட்டமைப்பு எண்ணிக்கையில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருப்பதால், அதுவொரு பிரதான தமிழ்த் தேசிய தரப்பாக இருக்கின்றது. இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இருக்கும் கஜேந்திரகுமார் தரப்பு கூட்டமைப்பின் அரசியல் தீர்மானங்களை எதிர்ப்பதன் மூலம், அதிக பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்ற முயற்சிக்கின்றது. இது அடிப்படையில் பழைய காங்கிரஸ் - தமிழரசு கட்சி முரண்பாட்டை புதிய தலைமுறையில் முன்னெடுக்கும் ஓர் உபாயமேயன்றி இதில் எந்தவோர் உன்னதமான அரசியல் நோக்கமும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி தீர்வை பகிரங்கமாக ஆதரித்தால்தான் தாம் பேச்சில் பங்குகொள்வோமென்று கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார். இது ஒரு போதுமே நடக்கும் விடயமல்ல என்பதைத் தெரிந்தே கஜேந்திரகுமார் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். ஏனெனில், ரணிலோ அல்லது பிறிதொரு சிங்கள அரசியல் கட்சியின் தலைவரோ அவ்வாறானதோர் அறிவிப்பை ஒருபோதுமே முன்வைக்கப் போவதில்லை. ஏனெனில், அதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல் தமிழர் பக்கத்தில் இல்லை. அது விடுதலைப் புலிகள் அமைப்பிடம் இருந்தது. ஏனெனில், விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ பலத்தின் அடிப்படையில்தான் பேச்சுக்கு சென்றிருந்தது. எனவே, அந்த அமைப்புடன் ஏனையவர்களை ஒருவர் ஒப்பிடுவாரானால் அது அவரின் அரசியல் முதிர்சியின்மையின் அடையாளமாகவே நோக்கப்படும்.

கூட்டமைப்பின் கடந்தகால அணுகுமுறைகளில் பல தவறுகள் உண்டு. ஆனால், இம்முறை சில விடயங்களில் கூட்டமைப்பு நிதானமான அணுகுமுறையைக் காண்பித்திருக்கின்றது. சமஷ்டி அடிப்படையில் பேச்சு என்று கூறி, தொடர்ந்தும் கொழும்பின் தந்திரோபாயத்துக்கு சிக்குப்பட்டதே இதுவரையான (கடந்த 13 வருடங்களாக) கூட்டமைப்பின் அணுகுமுறையாக இருந்தது. ஆனால், இம்முறை ரணிலின் அழைப்பை பழைய அணுகுமுறைகளுக்கு மாறாகவே கையாண்டிருக்கின்றது. பேச்சுக்கான புறச் சூழலை ஏற்படுத்தும் நோக்கில் சில முன்னேற்பாடுகளை நிரூபிக்குமாறே கூட்டமைப்பு கோரியிருக்கின்றது. ரணிலின் நகர்வுகளை அவதானித்து, அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்கலாம் என்பதே கூட்டமைப்பின் அணுகுமுறையாகும். இவ்வாறனதோர் அணுகுமுறையை கைக்கொள்ளுமாறே புத்திஜீவிகளும் கூட்டமைப்பின்மீது அழுத்தங்களை பிரயோகித்து வந்தனர்.

இது தவறு - துரோகமென்று கூறி, அனைத்தையும் நிராகரிப்பதாயின் - அதாவது, தென்னிலங்கை சமஷ்டியை வெளிப்படையாக அறிவித்தால் மட்டுமே நாங்கள் பேசுவோம் என்று ஒற்றைக்காலில் நிற்பதாயின் அதற்கான பலத்தை தமிழர்கள் முதலில் நிரூபிக்க வேண்டும். அவ்வாறானதொரு பலத்தை நிரூபிப்பதற்கு கஜேந்திரகுமார் இதுவரையில் செய்தது என்ன? கஜேந்திரகுமாரும் கூட்டமைப்பினரை போன்றே பாராளுமன்ற விவாதங்களில் பங்குகொண்டு தனது வாதங்களை முன்வைக்கின்றார். அவர்களைப் போன்று ஊடக சந்திப்புக்களை நடத்துகின்றார் - அறிக்கைகளை வெளியிடுகின்றார். இவற்றின் மூலம் தென்னிலங்கையின்மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முடியுமா? எந்தவொரு மாற்று வழியையும் முன்வைக்காமல், அதனை செயல்வடிவில் காண்பிக்காமல், வெறுமனே கூட்டமைப்பின் அனைத்து நகர்வுகளையும் எதிர்த்துக் கொண்டிருப்பதன் பொருள் என்ன? இதனை மாற்று அரசியலென்று கூறலாமா?

# ஈழத்து சிதம்பரத்தில் திருவம்பாவை உற்சவத்தை வழமைபோல் நடத்தக் கோரி ஞாயிறு போராட்டம்

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவம்பாவை உற்சவத்தை வழமைபோல் சிறப்பாக நடத்தக் கோரி காரைநகரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற ஈழத்துச் சிதம்பரம் என வர்ணிக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் திருவெம்பாவை உற்சவத்தை நடத்தாமல் இருப்பதற்காக ஆலயத்தை பாலஸ்தாபனம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் பலதரப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்ட போது திருவிழா உபயகாரர்களினால் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதன் அடிப்படையில் பாலஸ்தாபனம் செய்ய இடைக்காலத் தடை உத்தரவை ஊர் காவல்துறை நீதிமன்ற வழங்கி இருந்தது.

இதனனை அடுத்து திருவெம்பாவை உற்சவ ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அதனைக் கொரோனா காலத்தில் நடத்தியமை போன்று காலை 5 தொடக்கம் 7 மணிக்குள் நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சி எடுத்து வருவதாகவும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் திருவம்பா உற்சவத்தை வழமை போன்று சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஆலய நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரியும் காரைநகர் மக்களால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை காரைநகரில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

(அ)

# முட்டைக்கான சில்லறை விலை வர்த்தமானிக்கு இடைக்கால தடை

*கொழும்பு, டிசெ. 16*

முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து நுகர்வோர் அதிகார சபை வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முட்டை விலை தொடர்பான வழக்கு பிரசாந்த டி சில்வா மற்றும் கேமா ஸ்வர்ணாதிபதி ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

அதன்போது, வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 42 ரூபாவாகவும் சிவப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும் நிர்ணயம் செய்ய, நேற்றைய தினம் கூடிய நுகர்வோர் விவகார அதிகாரசபை தீர்மானித்ததாக அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

அதன்போது, முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்சா, அந்த விலைகளுக்கு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் உடன்படவில்லை என நீதிமன்றுக்கு அறிவித்தார்.

வர்த்தமானி அறிவிப்பில் தற்போதுள்ள கட்டுப்பாட்டு விலைகளை விட புதிய விலைகள் குறைந்துள்ளதாகவும் அதனால் திருப்தியடைய முடியாது எனவும் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, மனுவை விசாரணைக்கு உத்தரவிடுமாறும் கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கை பெப்ரவரி 6ஆம் திகதி விசாரிப்பதற்கு தீர்மானித்துள்ளது

அத்துடன், முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து கடந்த ஒகஸ்ட் 19ஆம் திகதி நுகர்வோர் சேவை அதிகார சபையினால் வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தலை, விசாரணை முடியும் வரை இடைநிறுத்தி நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. (அ)

# ‘ஐஸ்’ வைத்திருந்த குற்றச்சாட்டுகளில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது!

*கொழும்பு, டிசெ. 16*

இந்த வருடத்தில் இது வரை ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6,728 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐஸ் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை -

நாட்டின் பல பகுதிகளில் பாடசாலை மாணவர்களின் பைகளைச் சோதனையிடும் வேலைத் திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டது.

5 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட ஐஸ் போதைப் பொருளை வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் வகையில் விஷம், அபின் மற்றும் ஆபத்தான போதைப் பொருள் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அண்மையில் பாராளுமன்றத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 16 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அஷ்டமி




**மேடம்**
தடைபட்டு இருந்த செயல்கள் நிறைவேறும். காலையிலேயே நல்ல தகவல் வரும். உங்கள் செயல் நீங்கள் நினைத்தபடி நிறைவேறும். உறவினரிடம் ஏற்பட்ட சங்கடம் தீரும். சொத்து சேரும்.

**இடபம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினர் ஒருவரால் உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
தடைபட்ட முயற்சி இன்று நடைபெறும். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளின் எண்ணம் நிறைவேறும்.மற்றவர்களால் செய்ய முடியாத ஒரு செயலை இன்று செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**
செல்வாக்கு அதிகரிக்கும். தடைபட்ட பணம் வந்து சேரும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.உங்கள் பேச்சாற்றலால் சமூகத்தில் உங்கள் புகழ் உயரும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை ஏற்படும். நெருக்கடி நிலை விலகும்.பணிபுரியும் இடத்தில் குடும்பத்தில் கவனக்குறைவால் சில சங்கடம் தோன்றி மறையும்.

**கன்னி**
வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். செலவுகள் அதிகரிக்கும். வருமானத்தில் நெருக்கடி ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவரின் ஆசையை நிறைவேற்றுவீர்கள். நவீன பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
செயல்களில் லாபம் ஏற்படும். எதிர்பார்ப்பு நிறைவேறும். நிதிநிலை உயரும். லாபகரமான செயலில் ஈடுபடுவீர்கள். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். முயற்சி இன்று நிறைவேறும்.

**விருட்சிகம்**
வேலை வாய்ப்பிற்கான நல்ல தகவல் உங்களைத்தேடி வரும்.மேற்கொள்ளும் முயற்சியில் அனுகூலம் உண்டாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியை மேற்கொள்வீர்கள்.

**தனுசு**
கடந்தகால அனுபவத்தைக் கொண்டு செயலில் வெற்றி காண்பீர்கள். உறவினர் ஒருவருடன் மோதல் உண்டாகலாம். வார்த்தைகளில் கோபம் வேண்டாம். உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
எதிர்பார்ப்பு இன்று நிறைவேறாமல் போகும். மனவுளைச்சல் தோன்றி மறையும்.புதிய முயற்சிகளையும், வெளியூர் பயணங்களையும் தவிர்ப்பது நல்லது.வீண் சச்சரவு வேண்டாம்.

**கும்பம்**
புதிய முயற்சி பலிக்கும். பணவரவு அதிகரிக்கும். தம்பதிகளுக்குள் உண்டான பிரச்னை விலகும். குடும்பத்தில் அக்கறை செலுத்துவீர்கள். செயல்களில் ஏற்பட்ட தடை விலகும். நன்மை உண்டாக்கும்.

**மீனம்**
பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். எதிரி பலமிழந்து போவார்கள். சுறு சுறுப்புடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள். எதிரிகளால் உண்டான பிரச்னையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

# 2024 மக்களவை தேர்தல் கூட்டணி பா. ஜ. கவே முதன்மை வகிக்கும்!

## - பொன். இராதகிருஷ்ணன்

சென்னை, டிசெ. 16

தமிழகத்தில் 2024 ஆம் ஆண்டு நடக்கவுள்ள மக்களவை தேர்தலில் தமிழகத்தில் பா. ஜ. கவே முதன்மை கட்சியாக செயல்படும். இந்தக் கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணையும் என்று பா. ஜ. கவின் முன்னாள் தமிழக தலைவர் பொன். இராத கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணியிலேயே பா. ஜ. க. இடம் பெற்றிருந்தது. இந்நிலையில், அ. தி. மு. க. கட்சிக்குள் பிளவுகள் - குழப்பங்கள் நிலவுகின்றன.

இந்நிலையில், பா. ஜ. கவின் மையக் குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டத்தின் பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த பொன். இராதாகிருஷ்ணன், பா. ஜ. க. கூட்டணியில் புதிதாகப் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளன என்று கூறினார்.

மேலும், மக்களவைத் தேர்தல், கிளை அளவில் பா. ஜ. கவை வலுப்படுத்துவது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. மத்திய அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டுசென்று, அந்த திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவுக்கு பயனடைந்துள்ளனர் என்பதை உணர்த்தும் வகையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

வரும் மக்களவைத் தேர்தலுக்கு பா. ஜ. க. தயாராகிவிட்டது. அதிமுகவுடன் கூட்டணி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அகில இந்திய அளவில் பா. ஜ. கதான் தலைமை வகிக்கிறது. இந்த கூட்டணியில் புதிதாக மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்பு உள்ளது.

அ. தி. மு. க. உட்கட்சி விவகாரத்தில் பா. ஜ. க. தலையிடாது. தமிழகத்தில் பா. ஜ. க. முதன்மையான கட்சியாக வரவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்.

மக்களவைத் தேர்தலில் தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் தி. மு. க. வெற்றி பெறும் என்பது ஸ்டாலினின் கற்பனை. தி. மு. க., காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் தனித்து போட்டியிட்டால், பா. ஜ.கவும் தனித்துப் போட்டி யிடும். ஆனால், அவர்களால் தனித்துப் போட்டியிட முடியாது - என்றார். (ஐ)

# அமைச்சர்களின் ஊழல் பட்டியலை வெளியிடும் அண்ணாமலையின் அறிவிப்பை வரவேற்கிறோம்!

## தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, டிசெ. 16

தி. மு. க. அமைச்சர்களின் ஊழல் பட்டியல் வெளியிடப்படும் என்ற அண்ணாமலை அறிவிப்பை வரவேற்கிறேன். ஆனால், அதை நிரூபிக்க வேண்டும் - என்று தி. மு. கவின் துணைபொதுச் செயலாளர் ஆ. ராசா தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித் அவர், விளை நிலங்கள் ஒருபோதும் எடுக்கப்படாது. அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த பரப்படும் தகவல்கள் தவறானது. நிலத்தடி நீரை கெடுக்கும் தொழிற்சாலைகள் அங்கு வராது. அனுமதி இல்லாமல் தனிநபர் சாகுபடி நிலத்தை எடுக்க மாட்டோம். காற்று, நிலம் மாசுபடுத்தும் தொழிற்சாலை அங்கு வராது

50 கோடி ரூபாய்க்கு மேல் எந்த நிறுவனங்கள் என்றாலும் மத்திய அரசு மூலம் தான் அனுமதியளித்து வர வேண்டும். அண்ணாமலை அரசியல் எனக்கு புரியவில்லை. நாங்கு நேரியை தொழில் முனைவோர் விரும்பவில்லை அதற்கு என்ன செய்ய முடியும்?மக்களின் எதிர்ப்புகள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் மக்கள் பக்கம் தான் இருப்போம்.

தி. மு. க. அமைச்சர்களின் ஊழல் பட்டியல் வெளியிடப்படும் என்ற அண்ணாமலை அறிவிப்பை வரவேற்கிறேன். ஆனால், அதை நிரூபிக்க வேண்டும். மக்களின் தேவை என்ன என்பதை பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் கேட்டு தீர்த்து வைப்பேன். பாதிப்பு என்றால் மக்கள் பக்கம் நிற்பேன் - என்றார். (ஐ)

# தமிழக அரசாங்கத்தை கண்டித்து அ. தி. மு. க. நேற்றும் போராட்டம்!

சென்னை, டிசெ. 16

சொத்து வரி உயர்வை கண்டித்து தமிழகம் முழுவதும் அ. தி. மு. க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து இருந்தார். அதன்படி தமிழகம் முழுவதும் நகராட்சி பகுதிகளில் நேற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் சொத்து வரி, பால் விலை உயர்வு, தேங்காய் விலை வீழ்ச்சி உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அ. தி. மு. க. சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடந்தது.

இந்தப் போராட்டத்தில் 500இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதில், முன்னாள் துணை சபாநாயகர் பேசியதாவது:-

எடப்பாடியார் ஆட்சி காலத்தில் மேற்கு புறவழிச்சாலைக்கு நிதி ஒதுக்கப்பட்டு, 50 சதவீத பணிகள் முடிந்திருந்தது. ஆனால் கடந்த ஓராண்டாக பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு வளர்ச்சி பணிகளை தி. மு. க. அரசு நிறுத்தி வைத்துள்ளனர்.

(ஐ)

# மொழியை வைத்து அரசியல் செய்வதை தவிர்க்க வேண்டும்!

## புதுச்சேரி துணை ஆளுநர்

சென்னை, டிசெ. 16

மொழியை வைத்து அரசியல் செய்வதை விட்டு விட்டு, அவரவர்களுக்கு என்ன மொழி தேவையோ அந்த மொழியை கற்றுக் கொள்கிற சுதந்திரம் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் சார்பில் நடைபெற்ற தமிழ் பாரம்பரியம் மற்றும் இந்திய மொழிகள் வார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதில், “மொழியை வைத்து அரசியல் செய்வதை விட்டு விட்டு, அவரவர்களுக்கு என்ன மொழி தேவையோ அந்த மொழியை கற்றுக் கொள்கிற சுதந்திரம் அவர்களுக்கு இருக்க வேண்டும்.

இன்னொரு மொழியை கற்றுக் கொள் என்ற சொன்னவுடனேயே அதை திணிப்பு என்று தவறாக முன் நிறுத்துகிறார்கள், இது திணிப்பு அல்ல. இனிப்பான தமிழை அனைவரும் கற்க வேண்டும்.

நம் தமிழை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு, மற்ற மொழிகளை கற்றுக் கொள்வதில் தவறில்லை என்பது என் கருத்து. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மஞ்சளுடன் கைதானோருக்கு ஒரு இலட்சம் ரூபாய் தண்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணத்தில் மஞ்சளுடன் கைதான இருவருக்கும் மல்லாகம் நீதவான் நீதிமன்றம் ஒரு இலட்ச ரூபாய் தண்டப்படம் அறவிட்டுள்ளதுடன் , அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட மஞ்சளை அரசுடமை ஆக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியில் 2 ஆயிரத்து 448 கிலோ கிராம் மஞ்சளுடன் சுதுமலைப் பகுதியை சேர்ந்த இருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து, விசாரணைகளில் போது இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, ஒரு இலட்ச ரூபாய் தண்டப் பணம் அறவிட்ட மன்று , சான்று பொருளாக மன்றில் சமர்ப்பித்த 2448 கிலோ மஞ்சளையும் அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்டது.(அ)

# மோதலில் காயமுற்றோரை ஏற்றிய அம்புலன்ஸ் வாகனம் மீது தாக்குதல்!

## அல்வாய் வடக்கில் புதன் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

பருத்தித்துறை - அல்வாய் வடக்கு பகுதியில் இரு வன்முறை கும்பல்களுக்கிடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் காயமடைந்தவர்களை ஏற்றச் சென்ற அம்புலன்ஸ் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன், உயிர்காப்பு பணியாளர்களும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.




நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இரு வன்முறை கும்பல்களுக்கிடையில் வாள் வெட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் பலர் காயமடைந்த தகவல் வழங்கப்பட்ட நிலையில் 1990 அவசர அம்புலன்ஸ் வாகனம் சம்பவ இடத்திற்குச் சென்று காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றுள்ளது.

இதன்போது அம்புலன்ஸ் வாகனத்தை வழிமறித்த சிலர் அதன் மீது தாக்குதல் நடத்தியதுடன், வாகனத்தில் இருந்த உயிர்காப்புப் பணியாளர்களை கடுமையாக அச்சுறுத்தியுள்ளனர்.

எனினும் அம்புலன்ஸ் வாகனம் அங்கிருந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்கு சென்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# ஒரு மாதத்தில் ஒருவரின் வாழ்க்கை செலவு ரூ.13,810

கொழும்பு, டிசெ. 16

இலங்கையில் தனிநபர் ஒருவர் தனது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.13,810 தேவை என புள்ளிவிவரவியல் மற்றும் தொகை மதிப்பு திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதத்திற்கான மதிப்பீடே இது.

புள்ளிவிவரவியல் மற்றும் தொகை மதிப்பு திணைக்களத்தின் , செப்டம்பர் மாத மதிப்பீட்டில் ஒரு தனிநபருக்கு ரூ.13,772 தேவை என கணக்கிடப்பட்டிருந்தது.

ஒக்ரோபர் மாத மதிப்பீட்டின்படி, கொழும்பில் வசிக்கும் ஒரு நபருக்கு அடிப்படைத் தேவைகளுக்கு ரூ.14,894 தேவைப்படும். மொனராகலையில் வசிக்கும் ஒருவருக்கு அடிப்படைத் தேவைகளை ஒரு மாதத்திற்குள் செலுத்த ரூ.13,204 தேவைப்படும்.

அதன்படி, தற்போது இலங்கையில் மொனராகலை குறைந்த வாழ்க்கைச் செலவுள்ள மாவட்டமாகக் கருதப்படும் அதேவேளை கொழும்பு வாழ்வதற்கு மிகவும் விலையுயர்ந்த நகரமாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், இலங்கையில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சராசரியாக மாதாந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 55,240 தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சம்பந்தன் போர் குற்றவாளியா?

## காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கேள்வி

வவுனியா, டிசெ. 16

சம்பந்தன் போர் குற்றவாளியா? என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் நேற்று ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ் பிள்ளைகளை கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2126ஆவது நாள் இன்று.

அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலும் சம்பந்தன் கூறியது யாழ்ப்பாணத்தில் ரணில் சொன்னதுதான்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டதாக சம்பந்தன் சர்வகட்சிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டமை சம்பந்தனுக்கு எப்படி தெரியும்?அவர் அதை நம்பினால், ஆதாரம் மற்றும் நேரில் கண்ட சாட்சியை எமக்கு காட்டுங்கள்.

சிங்களத் தலைவர்களிடம் அவர் முள்ளிவாய்க்காலில் இருந்த அனைவரையும் கொல்லச் சொன்னதால்தான் , அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாக தைரியமாக வெளியே வந்து சொல்ல முடிகிறது.

இதனால்தான் முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டு வன்னியை சிங்களவர்கள் கைப்பற்றும் வரை சம்பந்தனும் ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் சென்னையில் ஒளிந்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச விசாரணையை விரும்பாததற்குக் காரணம், அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களில் குற்றவாளியாக்கும் என்பதாலேயே-என்றார். (அ)

# டிலான் சேனாநாயக்க மீது கத்திக்குத்து தாக்குதல்!

கொழும்பு, டிசெ. 16

சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனாநாயக்க மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நுகேகொட, பகொட வீதியில் அமைந்துள்ள அவரது கலையகத்தில் வைத்து நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கையில் காயத்துக்குள்ளான அவர், களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.



அவரை இருவர் கத்தியால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவித்த மிரிஹான பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கூறினர். (அ)

# எதிர்காலத்தில் மின்சாரமின்றி நாடு இருளில் மூழ்கும் ஆபத்து!

## மின்சார பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 16

எதிர்காலத்தில் கடும் மின்சார நெருக்கடி நிலை ஏற்படக்கூடும் என மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலக்கரியை தாங்கிய 5ஆவது கப்பலே நாட்டை வந்தடைந்துள்ளது. அது



நிறைவடைந்தால் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கக்கூடும்.

தற்போதைய சூழலில் நிலக்கரியுடனான 24 கப்பல்கள் நாட்டை வந்தடைந்திருக்க வேண்டும். அதனை அரசாங்கம் தவறவிட்டுள்ளது.

கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்தமையினால் எதிர்காலத்தில் நீர் மட்டம் குறைவடைவதற்கான ஏதுநிலைகள் உள்ளன. மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய நீர் மட்டம் 75 சதவீதம் என கணிப்பிடப்பட்டுள்ளது-என்றார். (அ)

# வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்ய பதிவாளர் நாயகத்தின் அனுமதி கட்டாயம்

கொழும்பு, டிசெ. 16

வெளிநாட்டவர்களை திருமணம் செய்ய இலங்கையர்கள் பதிவாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பெண்கள் வெளிநாட்டுப் பிரஜைகளை திருமணம் செய்த பின்னர், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாக பாதுகாப்பு அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய, திருமணப் பதிவாளர் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் 1800 இலங்கையர்கள் வெளிநாட்டவர்களை திருமணம் செய்துள்ள நிலையில், இனிவரும் காலங்களில், வெளிநாட்டவர்களை திருமணம் செய்வதற்கு, பதிவாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றிருப்பது கட்டாயமாக்கப்படவுள்ளதுடன், திருமண வயது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

# தனித்து போட்டியிடுவது குறித்து தமிழரசு மட்டும் முடிவெடுக்காது

## பங்காளிகளுடனும் பேசுவோம் என்கிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், டிசெ. 16

**தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுவது குறித்து, பங்காளிக் கட்சியுடன் இணைந்து அவர்களுடன் சமரசமாக பேசித்தான் முடிவு எடுப்போமே தவிர தனித்து தீர்மானத்தை எடுப்போம் என கூறவில்லை என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இல்லாமல் , தனித்தனியாக தேர்தல்களை எதிர்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், அது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனிடம் கேட்டபோதே அவ்வாறு இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரசுக் கட்சி தனியாக போட்டிடுவது என்பது, தமிழரசுக் கட்சியின் தனி முடிவல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்துதான் இந்த முடிவை எடுக்க உள்ளோம்.

தற்போது உள்ள தேர்தல் முறையின் அடிப்படையில் நாங்கள் போட்டியிடுவோமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற மூன்று கட்சிகளும் தனித்தனியே போட்டியிடுவதாக இருந்தால் கூடுதலான ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது.

சில சபைகளில் அவ்வாறு போட்டிடுவதால் ஆசனங்கள் கூடும் எனக் கூற முடியாது. ஆனால் சில இடங்களில் கூடலாம். சில இடங்களில் குறையலாம். நாங்கள் பலமாக இருக்கின்ற பிரதேசங்களில் போட்டியிட்டால், எல்லா வட்டாரத்தையும் ஒரே கட்சி வெல்லுமாக இருந்தால் மட்டுமே விகிதாசாரத்தில் வருகின்ற ஆசனத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரே கட்சியாகப் போட்டியிட்டால் வட்டாரங்களில் கூடுதலாக வென்றால் விகிதாசார முறையில் நமக்கு ஆசனங்கள் கிடைக்காது.

இந்த கணக்கை அடிப்படையாக வைத்துத் தான் ஒரு தொழில்நுட்ப ரீதியாக நாங்கள் இதனை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றோம். இது சம்பந்தமாக பங்காளிக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதனுடனும் ,சித்தார்த்தனுடனும் பேசியிருக்கின்றேன். எனவே அவர்களுடன் பேசித்தான் இந்த நாங்கள் விடயத்தை அறிவித்திருந்தோம்.

ஆனால் நாங்கள் இறுதி முடிவெடுக்கவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு சபையிலும் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை வைத்து நாங்கள் அந்த முடிவை எடுப்போம்.

சில வேளைகளில் சில இடங்களில் சேர்ந்து போட்டியிடலாம். சில இடங்களில் தனித்தனியே போட்டியிடலாம். எனவே அந்தந்த சூழ்நிலைக்கேற்றவாறு தொழில்துறை ரீதியாக அந்த தீர்மானங்கள் எடுக்கப்படும்.

பங்காளி கட்சியுடன் இணைந்து அவர்களுடன் சமரசமாக பேசித்தான் இந்த முடிவின் எடுப்போமே தவிர நாங்கள் தமிழரசுக் கட்சி தனித்து தீர்மானத்தை எடுப்போம் என கூறவில்லை - என்றார்.

(அ)

# தேங்காய் விலை உயர்வு!

கொழும்பு, டிசெ. 16

உள்ளூர் சந்தையில் தேங்காயின் விலை 9.2 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம்மாதம் நடைபெற்ற இரண்டாவது தேங்காய் ஏலத்தில், ஆயிரம் தேங்காய்களின் விலை 76,438 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அந்த அதிகார சபையின் தகவல்கள் தெரிவித்தன.

ஏலத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, அதன் விலை 69,975 ரூபா.

722163 தேங்காய்கள் ஏலத்திற்கு விடப்பட்டுள்ளன. அதில் 547 365 தேங்காய்கள் விற்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த வருடத்தின் முதல் பத்து மாதங்களில் மொத்த தேங்காய் ஏற்றுமதி நான்கு வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்னை தீர்க்கப்படாது

## கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது



கொழும்பு, டிசெ. 16

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது சாத்தியமற்றது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் தலைவர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்னைக்கு தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கட்சி தலைவர்களுடான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு தீர்வு காண்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிடடார்.

13 ஆவது திருத்தத்திற்கு ஒரு சில அரசியல் கட்சித் தலைவர்கள் அரைகுறையாக இணக்கம் தெரிவித்தார்கள்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களுடான சந்திப்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கலந்துகொண்டேன்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் அரசியல் தீர்வு தொடர்பில் அவதானம் செலுத்துவது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது சந்தேகத்திற்குரியது.

அரசியல் தீர்வு குறித்து அவதானம் செலுத்தும் தமிழ் தலைமைகள் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலைப் பாதுகாக்க எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை.

ஆகவே காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த அவதானம் செலுத்த வேண்டும் என்பதைக் கூட்டத்தில் வலியுறுத்தினேன்.

பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சியமைத்த எந்த அரசாங்கத்தினாலும் இனப் பிரச்னைக்கு தீர்வு எட்டப்பட முடியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான இந்த அரசாங்கத்திற்கு மக்களாணை கிடையாது.

அரசாங்கம் எடுக்கும் எந்த தீர்மானத்தையும் நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

ஆகவே மக்களாதரவுடன் பிரச்னைக்கு தீர்வு காண தேர்தலை நடத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

75 ஆண்டு காலமாக தீர்க்க முடியாத இனப்பிரச்னைக்கு ஒரு மாத காலத்துக்குள் தீர்வு காண்பது சாத்தியமற்றது.

அரசியல் தீர்வுக்காக ஒன்றிணையும் அரசியல் கட்சி தலைமைகள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணைய வேண்டும் என்பதை வலியுறுத்தினேன் - என்றார்.

(அ)

# தமிழரின் மரபுரிமை காக்கப்படவேண்டுமெனில் அதற்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16

திருக்கோணேஸ்வரத்தில் இந்த அரசாங்கம் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதனூடாக அதன் புனிதத்தைக் கெடுத்து, அதனை ஒரு சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இந்திய தூதுவர் நேரடியாக அங்கு சென்று, நிலைமையை நேரில் அறிந்து வந்தார். இதைப்போலவே முல்லைத்தீவு, வவுனியா போன்ற பிரதேசங்களிலும் புராதன சைவக் கோயில்கள் இருந்த இடங்களில் அவை அகற்றப்பட்டு புத்த கோயில்களை உருவாக்கும் நடவடிக்கைகளும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கையில் தமிழ் மக்களின் மரபுரிமைகளைக் காப்பாற்றுவதாக இருந்தால், அதனைக் காப்பாற்றுவதற்கான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு இருக்கவேண்டும் என தெரிவித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் கடந்த 13.12.2022 அன்று காசியில் நடந்த பாரதியார் பிறந்தநாள் விழாவில், மரபுரிமைகளைப் பாதுகாக்கும் கடமைகளை இந்தியாவில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் இந்தியா செயற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். அந்த வகையில் 12 ஆண்டுகாலமாகப் பூட்டியிருந்த இலங்கையின் பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தையும் தாங்கள் மீளக் கட்டியெழுப்பி புனர் நிர்மாணம் செய்திருப்பதாகவும் அதன் மூலம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதா கவும் அவர் தெரிவித்துள்ளார்.

பலநூறு கோடி ரூபாய்களை செலவு செய்து ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கேதீஸ்வரம் சிவாலயத்தை மீட்டெடுத்து புனர் நிர்மாணம் செய்தமையை தமிழ் மக்கள் சார்பாக வரவேற்பதுடன் எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை திருநாடு இராவணேஸ்வரன் ஆண்ட சிவபூமி என அழைக்கப்படுகிறது. இலங்கைத் தீவைச் சுற்றி ஐந்து ஈஸ்வரங்கள் (சிவஸ்தலங்கள்) இருந்ததாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் கூறுகின்றனர். அவ்வாறான ஒரு நாட்டில், சைவக் கோவில்கள் இடிக்கப்பட்டு, புதிய புதிய பௌத்த கோயில்களை உருவாக்குகிற ஒரு வேலையை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து செய்து வருகின்றது.

திருக்கேதீஸ்வரத்திற்கு இணையாக பாடல் பெற்றுத் திகழும் திருக்கோணேஸ்வரத்தில்கூட இந்த அரசாங்கம் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதனூடாக அதன் புனிதத்தைக் கெடுத்து, அதனை ஒரு சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இந்திய தூதுவர் நேரடியாக அங்கு சென்று, நிலைமையை நேரில் அறிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதைப்போலவே முல்லைத்தீவு, வவுனியா போன்ற பிரதேசங்களிலும் புராதன சைவக் கோயில்கள் இருந்த இடங்களில் அவை அகற்றப்பட்டு புத்த கோயில்களை உருவாக்கும் நடவடிக்கைகளும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆகவே, இலங்கையில் தமிழ் மக்களின் மரபுரிமைகளைக் காப்பாற்றுவதாக இருந்தால், அதனைக் காப்பாற்றுவதற்கான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகியவற்றின் அடையாளங்களை எப்படி இலங்கை அரசு மாற்ற முற்படுகிறதோ அவ்வாறே ஏனைய இடங்களும் மாற்றப்படும்.

தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பது தொன்மைமிக்க சைவ ஆலயங்களைப் பாதுகாப்பது போன்ற அனைத்து உரிமைகளும் அதிகாரங்களும் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதன் ஊடாகவே நீண்ட நெடிய வரலாறுகளைக் கொண்ட அவர்களது மரபுரிமையும் பாதுகாக்கப்படும். ஆகவே இந்திய அரசாங்கம் இவற்றைக் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களின் மரபுரிமைகளை காலாதிகாலத்திற்குப் பாதுகாத்துக்கொள்ளும் அதிகாரங்களை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

(அ)

# இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது வடக்குக்கும் தெற்குக்கும் நல்லது!

## சுட்டிக்காட்டுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, டிசெ. 16

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது வடக்கிற்கும் தெற்கிற்கும் மிகவும் நல்லது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கலந்துரையாடல்களும் இலங்கை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களும் பிரதான இரண்டு விடயங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அங்கு நாம் முன்வைத்த கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு, உடலாகம ஆணைக்குழு மற்றும் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கைகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி, அனைத்து அறிக்கைகளிலும் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு தீர்வுகளை வழங்கக் கூடியதாக இருந்தும் வெளிநாட்டுப் பொறிமுறைகளின் கீழ் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனதையே அவை சுட்டிக்காட்டியுள்ளன.

இதற்கமைய, உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் தீர்வுகளை வழங்குவதாக நாம் வாக்குறுதியளித்திருந்த



போதும் அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி கூறியதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நவாஸ் ஆணைக்குழுவை நியமித்தார்.

இதற்கு முன்னைய இருந்த ஆணைக்குழுக்களின் ஆலோசனைகளை உள்வாங்கி இதற்கான தீர்வுகளை வழங்குவதற்கு தேவையான வேலைத்திட்டத்தை தயாரிப்பதே அந்த ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய இப்பொறிமுறையை கொண்டு வருவதற்கு எமக்கு பொறுப்பு உள்ளது.

பாதுகாப்பு தரப்பினரும் கூட இப்பொறிமுறையைக் கொண்டு வருவதில் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஒரு சில படைப்பிரிவுகள் பல்வேறு வகையில் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் படையினர் கூறுகின்றனர்.

சில படைப் பிரிவுகளுக்கு ஐ.நா நடவடிக்கைகளுக்கு கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தாங்கள் நிரபராதி என்பதை நிரூபிக்க அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சந்தேகத்திற்கிடமான முறையில் ஏதேனும் நிகழ்ந்திருப்பின் அது தொடர்பில், சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

எவ்வாறானாலும் அது போன்றதொரு ஒழுங்கு முறையை இதுவரை எங்களால் நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளது.

உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் இவற்றுக்கு தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடாக இதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். தென்னாபிரிக்காவுடனும் இது தொடர்பில் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது வடக்கிற்கும் தெற்கிற்கும் மிகவும் நல்லது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை நாம் முன்வைப்போம்.

இந்தக் குழுவின் பணிப்பாளர் நாயகமாக முன்னாள் தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் வெளிநாடுகளில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பல நல்ல முன்மொழிவுகள் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம்என்ற அடிப்படையில் அதற்கான வசதிகளை பெற்றுக்கொடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ)



# மன்னாரில் சிறப்புற நடந்த மாற்றுத்திறனாளிகள் விழா!

மன்னார், டிசெ. 16

மன்னார் பிரதேச செயலகத்தில் மாற்று திறனாளிகள் தினத்தையொட்டி மாற்று திறனாளிகள் தின விழா இடம்பெற்றது.

நேற்று வியாழக்கிழமை மன்னார் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த இந்த விழா மன்னார் கலையருவி மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே.மகேஸ்வரன், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ்,மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் மறுவாழ்வுச் சங்க இயக்குநர் அருட்கோதரி ஜோசப்பின் மேரி உட்பட மாணவர்கள், உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# அதிக விலையில் பொருட்கள் விற்பவர்கள் மீது நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 16

பண்டிகை காலத்தில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோர் மற்றும் பொருட்களை பதுக்கிவைப்போரை தேடி விசேட சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிரதேச ரீதியில் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த நிரிஎல்ல குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் முதல் இந்தச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தவுள்ளதாக அவர் கூறினார். (அ)

# இனப்பிரச்னை தீர்க்கப்பட்டால் வெளிநாட்டு முதலீடுகள் குவியும்

## கூறுகின்றார் விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 16

இனப்பிரச்னை தீர்க்கப்படும்போது, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் முதலீடு செய்ய முன்வருவார்கள் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான செயல்முறை ஒழுங்கு நீதியமைச்சிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்போதும், காணாமல் போனோர் அலுவலகம் நீதி அமைச்சின் கீழேயே பராமரிக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள அனைத்து கோப்புகளையும் அடுத்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் முடிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

காணாமல்போன வர்களுக்கான இழப்பீடாக ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சொத்து இழப்பீடு குறித்தும் தற்போது பரிசீலித்து



வருகிறோம்.

யுத்தம் காரணமாக பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகளை இழந்த சுமார் 11 ஆயிரம் பேர் வடக்கில் இருந்தனர். அவற்றை மீண்டும் பெற்றுக் கொடுத்தோம்.

அத்துடன், நீதியமைச்சின் கீழ் வட மாகாணத்தில் பல இணக்கப்பாட்டு மத்தியஸ்த நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தது.

இப்பிரச்னைகள் தீர்க்கப்படும்போது வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தற்போதும் செயற்பட்டு வருகிறது.

இவ்விடயத்தில் எங்களுக்கு தென்னாபிரிக்க அரசாங்கம் ஆதர வளித்து வருகின்றது - என்றார். (அ)

# மாகாணத் தேர்தலை பிற்போட்டவர்களே 13ஐ பற்றி பேசுவது வேடிக்கைக்குரியது!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 16

மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு செயற்பட்டவர்களே இன்று அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து பேசுவது வேடிக்கையானது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல் பல வருடங்களாக பிற்போடப்பட்டிருந்தது.

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் மக்கள் ஆர்வமாக இருந்திருந்தால், இரண்டு வருடங்களுக்கு முன்பே அந்த நடவடிக்கையை எடுத்திருப்பார்கள்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

முன்னோக்கிச் செல்லும் பாதை குறித்து நீண்ட விவாதம் உருவாக்கப்படவேண்டும். அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் செயல்படுத்தப்பட வேண்டும். ஒரு கட்சியாக, நாம் மறுசீரமைக்கவேண்டும்.

நாங்கள் தவறு செய்திருக்கலாம். நாங்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சிக்காரர்களை முன்னிறுத்தி முன்னேறவேண்டும், பதவிகளைப் பெற நினைக்கக்கூடாது. நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு நாம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

தேர்தல் என்று வரும்போது, யாருக்கு ஆதரவளிப்போம், யாருக்கு ஆதரவளிக்கமாட்டோம் என்று நீண்ட நேரம் விவாதிப்போம். வாழ்நாள் முழுவதும் பிரியமாட்டோம் என்றவர்கள் இப்பொழுது பிரிந்து சென்றிருக்கிறார்கள். அதுதான் அரசியல்.

நாம் மக்களுக்கு ஆதரவாக நின்று நிலையான அரசாங்கத்திற்கு வழி வகுக்க வேண்டும். நிலையான அரசாங்கத்தை நிறுவுவதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஜனாதிபதியும் செயற்படுவதை நாம் அறிவோம். எதிர்காலத்தில் நாம் எப்படி அரசியல் ரீதியாக இணைந்திருப்போம் என்று பார்ப்போம்-என்றார். (அ)

# பாடசாலைகளை அண்மித்து போதைப்பொருள் சோதனை

கொழும்பு, டிசெ. 16

பாடசாலைகளை அண்மித்து முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் புலனாய்வுப் பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிவில் உடைகளில் நடமாடும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பாடசாலை மட்டத்தில் கடமையில் ஈடுபடுத்துமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரஜா பொலிஸ் குழுக்களினூடாக பாடசாலைகளை அண்மித்து செயற்படும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளை தவிர தனியார் வகுப்புகளிலும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# இந்தியாவை ரஷ்யா திடீரென அதிகம் புகழ என்ன காரணம்?

- தீபக் மண்டல்



இந்தியா இயல்பிலேயே பன்முனை உலகில் முக்கியமான தூண் ஆக இருக்க விரும்புவது மட்டுமின்றி, அது பன்முனை உலக அமைப்பை உருவாக்குவதற்கான மையமாகவும் இருக்கிறது என ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் சமீபத்தில் கூறினார்.

இது குறித்து பேசி லாவ்ரோவ், யுக்ரேனுக்கு எதிரான போர் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு நடுநிலையானது என்று கூறி அதன் வெளியுறவுக் கொள்கையையும் பாராட்டினார்.

ப்ரிமகோவ் ரீடிங்ஸ் சர்வதேச மன்றத்தில் பேசிய அவர், மேற்கு நாடுகள், தங்களுடைய ஆதிக்கம் செலுத்தும் வகையிலான சர்வதேச முறையை ஒரு போதும் விட்டுக் கொடுக்காது. மேலும் பன்முனை அமைப்பின் யதார்த்தத்தையும் அவை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்று கூறினார்.

புதிய சக்திகள் அமெரிக்கா தலைமையிலான உலகை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

ஆனால், மேற்கு நாடுகள் இந்த 'முறையை' வலுக்கட்டாயமாக நிர்வகிக்க விரும்புகின்றன. 5 தசாப்தங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த பழக்கத்தை விட்டுக்கொடுக்க அவை தயா



ராக இல்லை.

ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகளை நிரந்தர உறுப்பு நாடுகளாக ஆக்க வேண்டும் என்பதையும் லாவ்ரோவ் வலியுறுத்தினார்.

இதற்காக இரண்டு நாடுகளும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்றும் கூறினார். பன்முனை உலக ஒழுங்கமைப்பில் இந்த நாடுகள் முக்கிய பங்கு வகிப்பதற்கான விருப்பம் அதிகரித்திருப்பதற்கு இதுவே சான்றாக இருக்கிறது என்றும் கூறினார்.

**ப்ரிமகோவ் மற்றும் அவரது பல்முனை உலகம் பற்றிய கோட்பாடு**

யெவ்கெனி ப்ரிமகோவ் ஒரு ரஷ்ய அரசியல்வாதியும், ராஜதந்திரியும் ஆவார். 1998 முதல் 1999ஆம் ஆண்டு வரை அவர் ரஷ்யாவின் பிரதமராக இருந்திருக்கிறார். அதற்கு முன்பு அவர் ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்திருக்கிறார்.

1996ஆம் ஆண்டு அவர் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தபோது, ரஷ்ய அரசின் முன்னிலையில் சீனா, இந்தியா, ரஷ்யா ஆகிய கூட்டணி நாடுகள் அடிப்படையிலான ஒரு பன்முனை உலக ஒழுங்கு அமைப்புக்கு ஆதரவு தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவால் விதிக்கப்பட்ட ஒருமுனை உலக ஒழுங்குமுறைக்கு மாற்றாக இது கூறப்பட்டது.

அமெரிக்காவை மையப்படுத்திய வெளியுறவு கொள்கையில் இருந்து ரஷ்யா மாற வேண்டிய தேவை இருக்கிறது என்று அவர் கூறினார்.

இந்தியா மற்றும் சீனாவுடன் ரஷ்யா தனது நட்புறவை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

பன்முக உலக அமைப்பு என்பதானது ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

மேற்கு நாடுகளை பின்பற்றுவதற்கு பதில் தங்களுக்கு என சொந்தமான சுதந்திரமான பாதையில் கூட்டணி அமைக்க விரும்பும் நாடுகள் ஓரளவு பாதுகாப்பு அளித்துக் கொள்ளும் திறன் கொண்டதாக இருக்கும் என்றும் கூறினார்.

தன்னுடைய உரையில் பன்முனை உலக முறையை குறிப்பிட்டு, சீனா, இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளைக் கொண்ட அமைப்பை மீண்டும் லாவ்ரோவ் வலியுறுத்தினார்.

இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று நாடுகள் கூட்டணி எனும் ப்ரிமகோவின் யோசனையானது பின்னர், பிரிக்ஸ் நாடுகள் என மாற்றமடைந்தது. மிகவும் சிலருக்கு மட்டுமே ரிக் (ரஷ்யா, இந்தியா, சீனா) இன்னும் செயல்படுவது தெரியும்.

இந்த கூட்டணியின் அடிப்படையில் தான் இந்த மூன்று நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் தொடர்ந்து சந்தித்துப் பேசுகின்றனர்.

**இந்தியாவை அதிகமாக பாராட்டுவது ஏன்?**

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் என்ற முறையில் ப்ரிமகோவின் பன்முனை உலக ஒழுங்கமைவு கோட்பாடு குறித்து லாவ்ரோஃப் நன்றாக அறிந்திருக்கிறார்.

இந்த முறையில் இந்தியாவுக்கு முக்கியமான பங்கிருப்பதை இப்போது அவர் பார்க்கிறார். ஆகவே, இதற்கு என்ன காரணம்?

ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குப் பதில் இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகள் ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் நாடுகளாக ஆக வேண்டும் என்று ஏன் அவர் வலியுறுத்துகிறார்?

இந்தியா பெரும் பொருளாதார சக்தியாக மாற வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் உலகின் முன்னணி பொருளாதார நாடாக மாற முடியும் என்று நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?

இந்தியாவின் பரந்த அளவிலான ராஜதந்திர அனுபவம், அனைத்து பிரச்னைகளையும் தீர்ப்பதாக இருக்கும் மற்றும் ஆசியாவில் அதன் தலைமை குறித்து கவனத்தை ஈர்த்து வருகிறது என்று ஏன் அவர் கூறுகிறார்.

இந்த அனைத்து கேள்விகளுக்கும் பதில்களைத் தெரிந்து கொள்ள, ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ரஷ்யா மற்றும் மத்திய ஆசிய ஆய்வுகளுக்கான பேராசிரியர் சஞ்சய் குமார் பாண்டே விடம் பேசியபோது:

'லாவ்ரோவின் இந்த கருத்து குறித்த பொருளை புரிந்து கொள்வதற்கு, நாம் கொஞ்சம் பின்னோக்கி பயணிக்க வேண்டும். இந்திய வெளியுறவுக் கொள்கை குறித்து ரஷ்யா புகழ்ந்து பேசுவது முதன்முறை அல்ல.

1955-56 மற்றும் 1971 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின் போதிருந்தே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடுகள் பட்டியலில் இந்தியாவை சோவியத் யூனியன் வைத்திருக்கிறது," என்று சஞ்சய் குமார் பாண்டே கூறினார்.

'அணிசேரா கொள்கை வடிவமைக்கப்பட்டபோதில் இருந்து கூட, சோவியத் யூனியன் இதனை அங்கீகரித்திருக்கிறது. இந்த அணிசேகராக் கொள்கை நாடுகள் ஒரு சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை கொண்டிருக்க வேண்டும் என்று நம்புகிறது.

சோவியத் யூனியன் அவர்களுடனான உறவை முன்னெடுக்க வேண்டும்," என்றும் அவர் தெரிவித்தார்.

'சோவியத் யூனியன் (இந்த யூனியனில் ரஷ்யா ஒரு பகுதியாக இருக்க வேண்டும்) அணிசேரா நாடுகளில் கூட இந்தியாவுடனான உறவுகளை முன்னெடுப்பது பற்றி அழுத்தம் கொடுக்க வேண்டும்.

லியோனிட் இலிச் காலகட்டத்தின் போது, இந்தியாவுடன் சோவியத் யூனியன் முக்கியமான ஒப்பந்தங்களை மேற்கொண்டது. இருந்தபோதிலும் 1990 களில் ரஷ்யா, மேற்கு நாடுகளை நோக்கிய ஒரு பாணியை சிறிதளவு கொண்டிருந்தது.

ஆனால், 1996ஆம் ஆண்டில் ப்ரிமகோவ் ரஷ்யா, இந்தியா மற்றும் சீனாவின் மூன்று நாடுகள் கூட்டமைப்பு பற்றி அதாவது சுஐஊ குறித்து பெரிதும் குரல் கொடுத்தார்," என்றார்.

'யூரேசியாவின் அச்சாணியாக இருக்கும் வெளியுறவுக் கொள்கை போல ரஷ்யாவின் சுதந்திரமான மற்றும் தனிப்பட்ட வெளியுறவுக் கொள்கைக்கு ப்ரிமகோவ் ஆதரவாக இருந்தார்.

ஆனால், இந்தியா மற்றும் சீனாவுடனும் சிறப்பான உறவுகளை உருவாக்குவது குறித்தும் வலியுறுத்தப்பட்டது," என குறிப்பிட்டார்.

**இந்திய வெளியுறவுக்கொள்கை சுதந்திரமானதா?**

இப்போது ரஷ்யா மீண்டும் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் அடங்கிய மூன்று நாடுகள் கூட்டணி மற்றும் பன்முனை சர்வதேச ஒழுங்கமைவு குறித்து பேசியிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவை இந்த அமைப்பின் மையமாக லாவ்ரோவ் ஏன் கருதுகிறார்?

'2014ஆம் ஆண்டு முதன்முறையாக கிரைமியா மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியபோது இந்தியா அதனை ஆதரிக்கவோ அல்லது கண்டனம் தெரிவிக்கவோ இல்லை.

கிரைமியாவில் ரஷ்யாவிற்கு சில நியாயமான பாதுகாப்பு கவலைகள் மற்றும் நலன்கள் இருக்கலாம் என்று அவர் கூறினார். கிரைமியா காலகட்டத்தில் இருந்து இப்போது யுக்ரேன் தாக்குதல் ஆகியவற்றில் மேற்கு நாடுகளில் இருந்து இந்தியாவின் கொள்கை என்பது எப்போதும் வித்தியாசமாகவே இருக்கிறது.

'இந்தியா ரஷ்யாவை ஆதரிக்கவில்லை. ஆனால், மேற்கத்திய நாடுகளின் மொழியையும் அதன் தடைகளையும் பார்த்து, இந்த வழியில் இந்த விவகாரத்துக்கு தீர்வுகாணக்கூடாது என்று சொல்கிறது," என்றார். ரஷ்ய அதிபர் புதினுடன் பேசும்போது பிரதமர் நரேந்திரமோதி, இது போருக்கான தருணம் அல்ல என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆனால், ஐநாவில் ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு நாடுகள் முன்மொழிந்த கண்டனங்களுக்கு இந்தியா ஆதரவு



கூடத் தரவில்லை.

அவரது கூற்றின்படி, 'இந்த விவகாரங்களில் மேற்கு நாடுகளைப் போல அல்லாமல், இந்தியா அதன் சுந்திரமான வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருக்கிறது என்று ரஷ்யாவுக்கு இதை தெளிவுபடுத்தியிருக்கிறது," பன்முனை அமைப்பில் இந்தியாவை ஒரு மையமாக ரஷ்யா பார்ப்பதற்கு இதுவே காரணம்.

2014-ஆம் ஆண்டு மோதி அரசு வந்த பிறகு, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் திருப்பம் ஏற்பட்டு, சுதந்திரமாகத் தோற்றமளிக்கிறது என்று சொல்லப்படுகிறது?

பாதுகாப்பு மற்றும் வெளியுறவு தொடர்பான விவகாரங்களை கையாளும் பிரபல இந்திய பத்திரிகையாளர் நயனிமா பாசு, இந்த கேள்விக்கு பதில் அளித்தார். 'தொடக்கத்தில் இருந்தே இந்தியா சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை பின்பற்ற முயற்சிக்கிறது. முன்பு இந்த கொள்கை அணி சேராக் கொள்கை என அழைக்கப்பட்டது. இப்போது இந்த கொள்கை உத்தி ரீதியிலான தன்னாட்சிக் கொள்கையாக மாறியுள்ளது.



அண்மைகாலமாக இதில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என நயனிமா கூறினார். மோதி அரசின் கீழ், இந்தியா அமெரிக்காவை நோக்கி தீர்க்கமாகத் திரும்புவதைக் காணலாம்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு



# யாழ். பல்கலைக்கழகமும் இலங்கை வங்கியும் ‘BOC விருது’க்கான புரிந்துணர்வு உடன்படிக்கை!



மனித நாகரீகத்தின் தோற்றம் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது அதன் ஓர் அங்கமாக வணிகமும், வணிகம் சார் நிறுவனங்களின் வளர்ச்சியினையும் நோக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது. அதே வேளை ‘திரை கடல் ஓடி திரண்டதொரு திரவியம் தேடு’ என்கின்ற சித்தாந்தத்துக்கு ஏற்ப வரலாறு, பண்பாடு, நாகரீகம் போன்றவற்றினை ஆய்வுக்கு உட்படுத்திய போது, வணிகத்தினதும் வணிக நிறுவனங்களினதும் முக்கியத்துவங்கள் அறிந்து கொள்ளபட்டதுடன், இதன் வாயிலாக மானிட சமுதாயம் பல்லாயிராம் ஆண்டுகளுக்கு முன்னரே வணிகம் மற்றும் வங்கியல் போன்றனவற்றில் சிறந்து விளங்கினர் என்பதற்கு பண்டைய தமிழ் இலக்கியங்களில் பட்டினப் பாலை, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், புறநானூறு, திருக்குறள் பேன்றனவற்றில் அலசப்பட்ட வணிகம் பற்றிய கருத்துகள் ஒரு சான்றாகும் ஆரம்ப காலங்களில் குறிப்பாக கிரீஸ் (Greece), ரோம் (Rome), எகிப்து (Egypt), பாபிலோனியா (Babylon) நாகரீகங்களில் வங்கிகளாக மதத்தலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் மத தலங்கள் பணங்களினை சேமித்து வைப்பதற்கான இடமாக இருந்தன.

“யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா” என்கின்ற உயர்ந்த சிந்தனை ஓட்டத்தின் வாயிலாக மானிட சமுதாயத்தின் வாழ்வியல் முன்னேற்றத்துக்கான ஓர் கலங்கரை விளக்காக விளங்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் “பழையன கழிதலும் புதியன புகுதலும்” வலுவல காலவரையினாலே என்று பவுணந்தியாரால் நன்நூலில் கூறப்பட்டது போல் புதியவைகள் புகுத்தி வெற்றிகள் பலகண்டு புதுப் பொலிவுடன் மிக வேகமாக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடமானது வளர்ச்சி பாதையில் முதன்மையானதும் தனித்துவம் வாய்ந்ததுமாகப் பயணிக்கின்றது.

இப்பீடமானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படுகின்ற புகழ் பூத்த கல்வி நிறுவனங்களுடனும் தொழில்முறை சார் அமைப்புகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை ஏற்படுத்தி தொடர்ச்சியாக இணைந்து பயணிப்பதன் மூலமாக மாணவர்களும், பீட அங்கத்தவர்களும் பல்வேறு வகையான நன்மையினை அனுபவிக்கின்றனர். அதன் ஓர் நீட்ச்சியாக இலங்கை வங்கியுடனும் ஓட உடன்படிக்கையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் இணைந்து கொள்வது இருசாராருக்கும் பெருமை மிகு தருணமாக அமைகின்றது.

1939ஆம் ஆண்டு சேர் ஆன்ட்ரூ கால்டெகாட் (Sri Andrew Caldecott) என்ற ஆங்கிலேய ஆளுனரினால் சம்பிரதாய பூர்வமாக கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள நகர அலுவலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்ட இலங்கை வங்கியானது (Bank of Ceylon) இலங்கையில் காணப்படுகின்ற 24 உரிமம் பெற்ற வணிகவங்கிகளில் முதன்மையான வங்கியாக தேசத்தின் வங்கியாளர் (Bankers to the Nation) என்கின்ற மகுட வாசகத்துடன் தொழில்பட்டு இன்றும் சிறப்பாக வெற்றி நடைபோடுகின்றது.

இலங்கை வங்கியானது இலங்கையின் முன்னணி வர்த்தக, மற்றும் அரசாங்க வங்கி என்கின்ற வகையில் நிலைபேண் நிதியளிப்பு (Sustainable Financing) பரோப காரம், மற்றும் சமூக முதலீடுகள் வழியாக குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றது. அதே வேளையில் அனைத்து பங்குதாரர்களின் நலனுக்காக ஆரோக்கியமான வணிகத்தை உருவாக்குகின்றது. இவ்வங்கியின் தூர நோக்கு (Vision) மற்றும் பணிக் கூற்று (Mission) என்பவற்றின் பிரகாரம் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு, புதிய வகையான நிதி தீர்வுகளினை வழங்கி வலுவான வங்கியாக செயற்படுவதுடன். பல்வேறு வகையான சமூக பொறுப்புக்கள் (Social responsibility) சார்ந்த வேலைத்திட்டங்களினை நடைமுறைப்படுத்தி வருகின்றன. குறிப்பாக எதிர்கால தலைமுறையின் ஒளிமயமான எதிர்காலத்தினை உருவாக்கி கொள்ள கல்வி செயற்பாடுகளில் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது இந்தவகையில் இலங்கை வங்கியானது யாழ் பல்கலைக்கழகத்தில் பல்வேறு வகையான வேலைத் திட்டங்களினை தேசத்தின் வங்கியாளன் என்ற முறையில் செய்தாலும். முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் காணப்படுகின்ற மாணவர்களின் நலன் கருதி, அதாவது அவர்களினை எதிர்காலத்தில் சுபீட்சம் உடைய தலைவர்களாக உருவாக்கி கொள்ளும் வகையில் மாணவர்களினை ஊக்குவிக்கும் நோக்கில் மாணவர்களுக்கு ஒரு புலமை பரிசில் திட்டத்தினை வழங்க உத்தியோக பூர்வ புரிந்துணர்வு உடன்படிக்கையில் மார்கழி மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை கைச்சாத்து இடுவதன் மூலமாக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் இலங்கை வங்கியும் சட்ட ரீதியாக இணைகின்றது.

> “மக்களுக்கான ஊக்கத்தின் அளவே அவர்களுடைய வாழ்க்கையின் உயர்வாக இருக்கும். எனவே சரியான நேரத் தில் திறமையினை கௌரவிப்பதன் மூலம் சிறந்த மானிட சமுதாயத்தினை உருவாக்கி கொள்ள வழிவகுக்கும் என்பதனைப் புரிந்ததன் விளைவால் உருவானதே இவ் உடன் படிக்கையாகும்.”

இவ் உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை வங்கியானது 1,000,000/= ரூபாவினை இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்பிலிட்டு அதிலிருந்து வரும் வட்டிக்கு ஒவ்வொரு ஆண்டும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் வழங்கப்படும் இரண்டு பிரதான பட்டப்படிப்புகளில் (Bachelor of Business Administration Honours Degree, Bachelor of Commerce Honours Degree) சிறந்து விளங்கும். தலா ஒரு மாணவனுக்கு “BOC விருது” என்ற நாமத்தில் தங்கபதக்கம் ஒன்றினை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

உண்மையில் இவ் விருதானது மாணவர்கள் கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மிக முக்கியமான உந்து சக்தியாகக் காணப்பாடும். திருக்குறளில் வள்ளுவரின் கூற்றின்பிரகாரம்

“வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு”

மக்களுக்கான ஊக்கத்தின் அளவே அவர்களுடைய வாழ்க்கையின் உயர்வாக இருக்கும். எனவே சரியான நேரத்தில் திறமையினை கௌரவிப்பதன் மூலம் சிறந்த மானிட சமுதாயத்தினை உருவாக்கி கொள்ள வழிவகுக்கும் என்பதனைப் புரிந்ததன் விளைவால் உருவானதே இவ் உடன்படிக்கையாகும். ஏற்கனவே முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் சிறந்த மாணவர்களினை இனம் கண்டு பல்வேறு வகையான விருதுகளையும் மற்றும் புலமை பரிசில்களினை வழங்கி மாணவர்களினை ஊக்கப்படுத்துவதுடன் மாணவர்களிடையே சகிப்புத் தன்மையையும் மற்றும் சகபாடிகளுக்கு இடையேயான சயோத்தியையும் உருவாக்கும்.



# இந்தியாவை ரஷ்யா திடீரென ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பினும், விதிகள் அடிப்படையிலான உலகளாவிய ஒழுங்கை ஆதரிக்கும் அதன் நிலைப்பாடு அப்படியே உள்ளது.

**இந்தியா - சீனா இடையிலான முரண்பாடு**

2014ஆம் ஆண்டில் இருந்து சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை ஊக்குவிப்பதில் இந்தியா வெற்றி பெற்றதா அல்லது மிகைப்படுத்தப்பட்டதா என்பது தான் கேள்வி.

‘முந்தைய அரசுகளும் பெரும் அளவுக்கு சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டன. ஆனால், கிரைமியாவை பற்றிய கண்ணோட்டம் மற்றும் அதன்பிறகு யுக்ரேன் மோதல் ஆகியவற்றில் மோதி அரசு, அதன் வெளியுறவுக் கொள்கையை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது,” என சஞ்சய் குமார் பாண்டே கூறினார்.

‘இந்தியாவின் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை மிகைப்படுத்துவதாக இருக்கிறது என்பது அல்ல. இதற்கான உதாரணங்கள் வெளிப்படையானவை.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடைகள் விதித்ததற்கு இடையே, இந்தியா தொடர்ந்து அதன் சாபஹர் திட்டத்துக்கு ஒத்துழைப்பு அளித்தது. இந்தியா 2016-17ஆம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உறுப்பினராக சேர்ந்தது.

அதாவது எஸ்சிஓ அமைப்பு சீனாவின் தாக்கம் கொண்ட அமைப்பாக நம்பப்படுகிறது. இன்னொரு புறம், குவாடில் இந்தியாவின் பங்கேற்பை மேற்கத்திய நாடுகளுடனான ஒத்துழைப்புக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்,” என்றும் அவர் கூறினார்.

ரஷ்யா, இந்தியா மற்றும் சீனாவின் புதிய உலகளாவிய முக்கோண வரிசையில் அதாவது RIC நாடுகளை ஒரு பெரிய பங்காக லாவ்ரோவ் காண்கிறார், ஆனால், சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள இறுக்கமான உறவுகளால் அதன் முக்கியத்துவம் குறைந்து விடாதா?

இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே எல்லை பிரச்னைகள், வணிக ரீதியான பிரச்னைகள் இருப்பது சரிதான்.

ஆனால், சுற்றுச்சூழல், சர்வதேச அளவில் வணிக ஒப்பந்தங்கள் குறித்த கேள்வி உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு நிலவுகிறது,” என சஞ்சய் குமார் பாண்டே கூறினார்.

**ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்த உறுப்பினர் பதவி**

ப்ரிமகோவ் ரீடிங்ஸ் சர்வதேச மன்றத்தில் பேசிய லாவ்ரோவ், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்திர உறுப்பினர் ஆவதற்கு ஜெர்மனி, ஜப்பான் நாடுகளை விடவும் இந்தியா, பிரேஸிலுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். சர்வதேச மற்றும் பிராந்திய முன்னோக்குகள் காரணமாக இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலுக்கு அதிக மதிப்புகளை சேர்க்க முடியும் என்று கூறினார்.

ஆனால், ‘இந்த தீர்மானம் என்பது ரஷ்யாவின் முடிவை மட்டும் சார்ந்த ஒன்றாக இருக்காது. இந்தியாவின் கோரிக்கையை சீனாவால் தடுத்து நிறுத்த முடியும்”, என நயனிமா பாசு கூறுகிறார். **(பிபிசி)**



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

கல்வி tv CHANNEL-1

**16.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**16.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# டெங்கு வலயம் பிரகடனம்

மட்டக்களப்பு, டிசெ. 16

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய திகாரி பிரிவு டெங்கு நோய் பரவக் கூடிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக கல்முனைப் பிராந்திய தொற்றா நோய் பிரிவின் வைத்திய அதிகாரி எம்.ஏ.சி.எம். பஸால் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய திகாரி பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள டெங்கொழிப்பு நடவடிக்கை தொடர்பான கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் சுகாதார வைத்தியதிகாரி ஏ.எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு புகை விசுறும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, பாடசாலைகளில் விசேட டெங்கொழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாட்டு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# தமிழர்களின் காணிகள் அபகரிப்பை சிங்கள தேசம் கச்சிதமாக செய்கிறது

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ. 16

தமிழ் மக்களின் காணியைச் சுவீகரிக்கின்ற செயற்பாட்டை சிங்கள தேசம் மிகவும் கச்சிதமாக செயற்படுத்தி வருகின்றது. தொல்பொருள் இடங்கள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக இடங்களை கையகப்படுத்தி, அந்த இடங்களை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அவர்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் தெரிவித்துள்ளார்.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், எல்லைக்கற்கள் இடுவதற்கு முயற்சித்த வேளை மக்களின் எதிர்பால் அது நடைபெறவில்லை. இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் 26 இடங்களில் தொல்பொருட்கள் இருப்பதாகத் தெரிவித்து தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை அப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தனர். அப்பகுதி மக்களின் பலத்த எதிர்ப்பால் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது திரும்பிச் சென்றுள்ளார்கள்.

தமிழ் மக்களின் காணியைச் சுவீகரிக்கின்ற செயற்பாட்டை சிங்கள தேசம் மிகவும் கச்சிதமாக செயற்படுத்தி வருகின்றது. தொல்பொருள் இடங்கள் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக இடங்களை கையகப்படுத்தி, அந்த இடங்களை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார்கள்.

மாறாக தமிழ் மக்களுக்கு எதிராக தாம் எதுவித செயற்பாடுகளையும் செய்யவில்லை என உலகத்துக்கும் தெரிவித்து வருகின்றார்கள். அனைத்துக் கட்சிகளின் சந்திப்புக்களூடாக, தமிழ் மக்களினாலும் தான் அங்கீகரிக்கப்படுவதாக ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்.

இந் நிலையில் அனைத்துக் கட்சிகளைச் ஜனாதிபதி சந்தித்து வருகின்றபோதிலும், வடக்கு-கிழக்கில் தமிழர்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

எனவே, உலக மக்கள், சர்வதேச அமைப்புக்கள் அனைவரும் தமிழ் மக்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டு ஒரு சரியான அரசியல் தீர்வை எட்டும் வரைக்கும், போலித் தனமான அரசியல் தலைவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# செவிப்புலன் வலுவற்றோருக்கு உலர் உணவுப் பொதி வழங்கல்



மட்டக்களப்பு, டிசெ. 16

இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை குறித்த நிறுவனத்தின் மட்டிக்களி கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சித்த ஆயுள்வேத மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் மா.நிரஞ்சன் கலந்து கொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர்களின் 50 குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்முனை மாநகர சபையின் உறுப்பினராக மனோரஞ்சினி

நிந்தவூர், டிசெ. 16

கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பேரின்பராஜா மனோரஞ்சினி, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் முன்னிலையில் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினராக பதவி வகித்து வந்த புவனேஸ்வரியின் விநாயகமூர்த்தி காலமானதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கே பாண்டிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இவர் அக்கட்சியினால் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

இவரது நியமனம் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 02.12.2022 ஆம் திகதியன்று தெரிவத்தாட்சி அதிகாரி கசன் சிறிநாத் அத்தநாயக்கவினால் வெளியிடப்பட்டிருந்தது.

இப்பதவியேற்பு நிகழ்வில் மாநகர சபையின் மற்றொரு ஐ.தே.க உறுப்பினரான நடராஜா நந்தினி மற்றும் புதிய உறுப்பினரின் குடும்ப உறவினர்களும் பங்கேற்றிருந்தனர். (அ-06)

# ஈரோஸ் அமைப்பின் நிறுவுநர் இரட்ணசபாபதியின் நினைவு



அம்பாறை, டிசெ. 16

ஈரோஸ் அமைப்பின் நிறுவுநர் தோழர் இரட்ணசபாபதியின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு வம்மியடிப் பிள்ளையார் ஆலய ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் தோழர் இரா. ஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மறைந்த தோழர் இரட்ணசபாபதியின் தாயார் தெய்வானை அம்மாள் சுடர் ஏற்றி வைக்க, வரவேற்புரையை கிழக்கு மாகாணச் செயலாளர் தோழர் சுந்தர் நிகழ்த்தினார்.

இவ் நினைவேந்தல் நிகழ்வில், ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் தோழர் இரா.ஜீவன், ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆய்வாளர் பேராசிரியர் பாலா.சுகுமார், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தோழர் புஸ்பராசா, ஈரோஸ் ஒருங்கிணைப்புச் செயலாளர் தோழர் திருச்செல்வம் மற்றும் அரசியல் சமூக ஆய்வாளரும், புரட்சிகர ஜனநாயக இயக்கத்தின் முன்னணிச் செயற்பாட்டாளருமான ஆகவே ஜபார் உட்பட முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ரிஷாத் எம். பியுடன் பேச்சு!



கொழும்பு, டிசெ. 16

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு இலங்கைக்கான ஐ.நா தூதரகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் அவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான வழிவகைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், சர்வதேச முகவராண்மைகளின் ஆதரவுடன் முன்னோக்கி செல்லும் முறைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதேவேளை, ஐ.நா வதிவிடப் பிரதிநிதி இலங்கைக்கு ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நன்றியினை தெரிவித்த ரிஷாத் எம்.பி, தனது சேவைக் காலத்தை நிறைவு செய்யவுள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார். (அ)

# பெரிய நீலாவணையில் நாவலரின் குருபூசை



அம்பாறை, டிசெ. 16

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது 200 ஆவது அகவை நிறைவினை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிழக்கிலங்கை இந்துக் குருமார்களினால் நடத்தப்படும் மஹா யாகம் நிகழ்வானது நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை 5.00மணி முதல் காலை 7 மணி வரை பெரிய நீலாவணை ஸ்ரீ மஹா விஷ்ணு வேதஸ்தானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

மேலும் இந்து குருமார்கள்,ஆலய தர்மகர்த்தாக்கள், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை மாவட்ட இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டிருந்தார். (அ)

# நியூசிலாந்தில் சிகரெட் புகைக்க வாழ்நாள் தடை!

## புதிய சட்டத்தை நிறைவேற்றியது அரசு

வெலிங்டன், டிசெ. 16

2025ஆம் ஆண்டுக்குள் நியூசிலாந்தை புகைப்பிடிக்காத நாடாக மாற்றவேண்டும் என்ற இலக்கை அந்த நாட்டு அரசு கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் மக்களிடம் புகைபிடிக்கும் பழக்கத்தை குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

இந்த நிலையில் நியூசிலாந்தில் இளைஞர்கள் சிகரெட் வாங்குவதற்கு வாழ்நாள் தடை விதிக்கும் புதிய சட்டத்தை அந்த நாட்டு அரசு நேற்று முன்தினம் நிறைவேற்றியது.



ஜனவரி 1, 2009 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த எவருக்கும் புகையிலை விற்கக் கூடாது என்று அந்த சட்டம் கூறுகிறது. இதன்மூலம் சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

அதாவது, நியூசிலாந்தில் அடுத்த 50 ஆண்டுகளுக்கு பிறகு சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது 63 ஆக இருக்கும் என சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் அதற்கு முன்பாகவே புகைபிடிக்கும் பழக்கம் மறைந்துவிடும் என்று சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர்.

இந்த புதிய சட்டம் நாட்டில் புகையிலை விற்க அனுமதிக்கப்படும் சில்லறை விற்பனையாளர்களின் எண்ணிக்கையை சுமார் 6,000 இல் இருந்து 600 ஆக குறைக்கிறது. மேலும் புகையிலையில் அனுமதிக்கப்பட்ட நிக்கொட்டின் அளவை குறைக்கவும் வழிவகை செய்கிறது.

(அ)

# கோவிட் குறித்து அச்சம் வேண்டாம்

ஜெனீவா, டிசெ. 16



கோவிட்-19 குறித்து இனியும் அச்சமடைய தேவையில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கோவிட்-19 வைரஸ் இனி உலகளாவிய அவசரநிலை அல்ல என்றும், அதுதொடர்பில் அச்சத்தை ஏற்படுத்த தேவையில்லை எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கோவிட்-19 வைரஸ் 2020ஆம் ஆண்டில் பொது சுகாதார அவசரநிலையாக பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தென்கொரியாவில் ஒரே நாளில் 84 ஆயிரம் பேருக்கு கொரோனா!

சியோல், டிசெ. 16

சீனாவை போலவே தென்கொரியாவும் கொரோனா தொற்றில் இருந்து முழுமையாக மீள முடியாமல் தவித்து வருகிறது. அங்கு திடீர் திடீரென கொரோனா தொற்று எழுச்சி பெறுகிறது.

அந்த வகையில் கடந்த சில நாட்களாக தென்கொரியாவில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் நேற்று ஒரே நாளில் அங்கு 84 ஆயிரத்துக்கு 571 பேருக்கு புதிதாக தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும் 46 பேர் தொற்றுக்கு பலியாகினர்.

(அ)

# தாய்வானில் நிலநடுக்கம்!



தாய்பேய், டிசெ. 16

தாய்வானின் கிழக்கு கடற்கரையில் வியாழக்கிழமை 6.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது, அதைத் தொடர்ந்து பல லேசான பின்அதிர்வுகள் ஏற்பட்டது, தலைநகர் தைபேயில் நடுக்கம் உணரப்பட்டது.

ஹூவாலியன் கவுண்டியின் கடற்கரையிலிருந்து 30 கிலோமீற்றர் (19 மைல்) தொலைவில் ஆறு கிலோமீற்றர் ஆழம் குறைந்த ஆழத்தில் நண்பக ஸ்ரீலுக்குப் பிறகு நிலநடுக்கம் ஏற்பட்டது.


அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் 5.9 ரிக்டர் அளவில் 12 கிலோமீட்டர் ஆழத்திலும் பதிவாகியுள்ளது.

சேதம் அல்லது உயிர்சேதம் குறித்து உடனடி தகவல் ஏதும் இல்லை.

“தாய்வான் முழுவதும் நிலநடுக்கம் உணரப்பட்டது, ஏனெனில் அது மிகவும் ஆழமற்றது” என்று வானிலை மையத்தின் நில அதிர்வு மையத்தின் தலைவர் சென் குவோ-சாங் செய்தியாளர்களிடம் கூறினார்.

“இதுவரை எட்டு அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன, அடுத்த மூன்று நாட்களில் மேலும் அதிர்வுகளை எதிர்பார்க்கிறோம்.”

தைபேயில் உள்ள ஏ.எவ்.பி நிருபர் ஒருவர் கூறுகையில்-




இந்த ஆண்டு முந்தைய நிலநடுக்கங்களை விட தலைநகரில் நிலநடுக்கம் குறைவாகவே உணரப்பட்டது.

தாய்வானின் சுரங்கப்பாதை மற்றும் ரயில்வே அதிகாரிகள் இரண்டும் ரயில்கள் குறைந்த வேகத்தில் இயங்குவதாகக் கூறியது, ஆனால் சேவைகள் நிறுத்தப்படவில்லை.

இரண்டு டெக்டோனிக் தகடுகளின் சந்திப்பிற்கு அருகில் தீவு அமைந்திருப்பதால் தாய்வானில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது.

6.0 அல்லது அதற்கு மேற்பட்ட சில நிலநடுக்கங்கள் ஆபத்தானவை. இருப்பினும் நிலநடுக்கம் எங்கு தாக்குகிறது மற்றும் எந்த ஆழத்தில் உள்ளது என்பதைப் பொறுத்தது.

செப்டம்பரில் தைவானின் கிழக்குக் கடற்கரையில் 6.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது, அதில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் ஒரு சில கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. (அ)

# ஈராக் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது நாமே!

## அறிவித்தது இஸ்ரேல்

ஜெருசலேம், டிசெ. 16

ஈராக்கில் இருந்து சிரியாவுக்குள் நுழைந்த வாகனத் தொடரணியின் மீது சமீபத்தில் வான்வழித் தாக்குதலை நடத்தியதற்கு புதனன்று இஸ்ரேலின் ஆயுதப்படைகளின் தலைவர் லெப்டினன்ட்-ஜெனரல் அவிவ் கோஹாவி உரிமை கோரினார்.

ஆயுதங்களை ஏற்றிச் சென்ற டிரக் இலக்கின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறினார்.

சம்பவம் நடந்த திகதியை அவர் குறிப்பிடவில்லை என்றாலும், அது “பல வாரங்களுக்கு முன்பு” நடந்ததாக விவரித்தார்

நவம்பர் 8ஆம் திகதி ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் இரண்டு எரிபொருள் ட்ரக்குகளை அழித்ததாக ஈராக் அதிகாரிகள் கூறியிருந்தனர். .

ரீச்மேன் பல்கலைக்கழகம் நடத்திய மாநாட்டில் கோஹாவி கூறினார், “ இஸ்ரேலிய உளவுத்துறை இல்லாவிட்டால், 25 டிரக்குகளில் (தொடரணியில்) இருந்த டிரக் - டிரக் எண் 8 - அது ஆயுதங்களைக் கொண்ட டிரக் என்பதை நாங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ”



“அங்கும், விமானிகளை அனுப்ப வேண்டியிருந்தது. தரையிலிருந்து வான் ஏவுகணைகளைத் தவிர்ப்பது எப்படி என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும், ”என்று அவர் மேலும் கூறினார். தொலைதூர பயணத்திற்கு பைலட் ஜெட் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. ஈராக் அதிகாரிகள் நவம்பர் 8 தாக்குதலை ஆளில்லா விமானத்தின் தாக்குதல் என்று விவரித்துள்ளனர்.

ஏறக்குறைய ஒரு தசாப்த காலமாக, இஸ்ரேல் சந்தேகத்திற்குரிய ஈரானிய அனுசரணை ஆயுத பரிமாற்றங்கள் மற்றும் சிரியாவில் போராளிகளை அனுப்புவதற்கு எதிராக வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கான பொறுப்பை இஸ்ரேலிய அதிகாரிகள் அரிதாகவே ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஈரானுடன் இணைந்த பிராந்திய அதிகாரி ஒருவர் நவம்பர் 8 வான் தாக்குதலில் இரண்டு சிரிய பிரஜைகள் கொல்லப்பட்டதாக கூறினார்.

ஈராக் - சிரியா எல்லையில் உள்ள அதிகாரிகளுக்கு ஈரானின் உயிர்ச்சேதம் எதுவும் தெரியவில்லை. (அ)

# குழந்தை பெற்றால் ரூபா மூன்று லட்சம்!

ரோக்கியோ, டிசெ. 16

ஜப்பானில் கடந்த சில ஆண்டுகளாகவே பிறப்பு விகிதம் தொடர்ந்து சரிந்து வருகிறது. அதே வேளையில் இறப்புகள் அதிகம் இருப்பதால் அங்கு மக்கள் தொகை வேகமாக குறைந்து வருகிறது.

கடந்த ஆண்டு அந்த நாட்டில் 8 லட்சத்து 11 ஆயிரத்து 604 பிறப்புகளும், 14 லட்சத்து 39 ஆயிரத்து 809 இறப்புகளும் பதிவாகின.

இந்த நிலையில் நாட்டில் குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ஜப்பான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு பல்வேறு சலுகைகளை அரசு வழங்குகிறது. அதன் ஒரு பகுதியாக குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு 4 லட்சத்து 20 ஆயிரம் யென் (சுமார் ரூ.2 லட்சத்து 52 ஆயிரம்) மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த மானியத்தை 80 ஆயிரம் யென் (சுமார் ரூ. 49 ஆயிரம்) உயர்த்தி 5 லட்சம் யென் (சுமார் ரூ.3 லட்சம்) ஆக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த தகவலை அந்நாட்டின் நிதி மந்திரி கட்சுனோபு கட்டோ தெரிவித்தார்.

(அ)

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பரந்துபட்ட அரசியல் கூட்டணி

## பேச்சுக்கள் ஆரம்பம் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, டிசெ. 16

யானை - தாமரை மொட்டு கூட்டணி கடந்த மே மாதம் உதயமாகிவிட்டது. எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து கொள்கை அடிப்படையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்க ஆரம்பகட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி பழைய செய்தியாகும்.

ஐக்கிய தேசிய கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான கூட்டணி கடந்த மே மாதம் 12ஆம் திகதி உதயமாகிவிட்டது.

ஐக்கிய தேசிய கட்சியும், பொதுஜன பெரமுனவும் தற்போது கூட்டணியாக ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் உள்ளது.

ஆகவே அவரை முன்னிலைப்படுத்தி இழக்கப்பட்டுள்ள மக்கள் ஆதரவை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் என பொதுஜன பெரமுனவினர் கருதுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு துளி அளவேனும் மக்களாணை கிடையாது. 2020 ஆம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வியடைந்து.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை மக்கள் ஜனநாயக முறைக்கமைய புறக்கணித்தார்கள்.

ஆனால் அவர் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு வந்து நெருக்கடியை சாதகமாக பயன்படுத்தி ஜனாதிபதியாகி விட்டார்.



தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதை அறிந்தே அரசாங்கம் தேர்தலை கண்டு அச்சமடைகிறது.

தமக்கு மக்கள் ஆதரவு உள்ளது என குறிப்பிடும் அரசாங்கம் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும். எமது அரசாங்கத்தின் குறைப்பாடுகளை சுட்டிக் காட்டினோம்.

ஆனால் எமது அரசாங்கம் சிறந்த ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்கவில்லை.

ஆகவே அரசாங்கத்தில் இருந்து வெளியேறினோம்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து கொள்கை அடிப்படையில் பரந்துபட்ட கூட்டணியை அமைக்க ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தை முன்னெடுத்துள்ளோம்.

முகம் முக்கியமல்ல, கொள்கை முக்கியம் என்பதற்கு முன்னுரிமை வழங்குவோம்- என்றார். (அ)



# 180 கிலோ கஞ்சா குருநகரில் மீட்பு!

கொழும்பு, டிசெ. 16

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட 180 கிலோ கஞ்சா, யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

குருநகர்க் கடற்பகுதியில் கஞ்சாவை மீட்ட கடற்படையினர், கஞ்சாவை எடுத்துவரப் பயன்படுத்தப்பட்ட படகையும், படகில் இருந்த சந்தேகநபரையும் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். (அ)

# 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 16

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 70,826 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இந்த காலப் பகுதிக்குள் 29,650 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியிருந்ததாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 41,176 டெங்கு நோயாளர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடம் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர். (அ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இறந்த கால்நடைகளுக்கு நட்டஈடு?

கொழும்பு, டிசெ. 16

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இறந்த கால்நடைகளுக்காக நட்டஈட்டை வழங்குவது தொடர்பிலான, அமைச்சரவை பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

குறித்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தால், இறந்த கால்நடைகளுக்காக நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக குளிர் காரணமாக, 1,800 இற்கும் அதிகமான கால்நடைகள் இறந்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



## முத்துசாமி திருநாவுக்கரசு

யாழ். கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா சிட்னி ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முத்துசாமி திருநாவுக்கரசு கடந்த 12-12-2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற முத்துசாமி – நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும்.பாமினி (அகில்), மதனி(மேகலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன், கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,ராகுலன், மாயா, ஜெகுலன், மரியா, கோகுலன் நிரோசா, கவிதாஸ், கீரா, கவிமாறன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,அரன், நிலா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (17.12.2022) சனிக்கிழமை நண்பகல் 10.30 மணியளவில், Camellia Chapel Corner and Roads Delhi Rd & Plassey Rd Category Corporate Office Place of Worship, North Ryde NSW 2113, Australia எனும் முகவரியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

# வடக்கு - கிழக்கில் மழை தொடரும்

கொழும்பு, டிசெ. 16

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடுத்த சில நாட்களில் கன மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்படுகிறது.

வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடுத்த சில நாட்களில் கன மழை பெய்வதற்கான சாத்தியமுள்ள தாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மாகாணத்திலும் பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் கன மழை ஏற்படக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளையில் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களைக் கோரியுள்ளது. (அ)

# பருத்தித்துறையில் திருட்டு 4 சந்தேகநபர்கள் சிக்கினர்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் கடந்த 7ஆம் திகதி, வீடொன்றுக்குள் புகுந்து நகைகளைத் திருடிச் சென்ற சந்தேகத்தில் நால்வர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரசிகரிய தகவலுக்கு அமைய, குற்றத் தடுப்புப் பிரிவின் உப பரிசோதகர் எச்.எல்.விராஜ் தலைமையிலான குழு முன்னெடுத்த நடவடிக்கைக்கு அமைய, பருத்தித்துறையைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்ட நிலையில், திருடப்பட்ட நகைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் .நெற்
THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு
Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN news

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# 15,476 படையினர் பணி விலகல்

கொழும்பு, டிசெ. 16

இராணுவத்தினருக்கான பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பணியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

பணிக்குச் சமூகமளிக்காத முப்படை வீரர்கள், பணிக்குத் திரும்புவதற்கான பொதுமன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பணிக்குத் திரும்பாத 15 ஆயிரத்து 476 இராணுவ வீரர்கள், சட்ட ரீதியாக பணியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

அவர்களில் 15 ஆயிரத்து 165 பேர் ஏற்கனவே சட்டரீதியாக பணியிலிருந்து விலகப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத், 194 அதிகாரிகள் தொடர்பான அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அவர்களும் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என குறிப்பிட்டார். (அ)

# அடிப்படைப் பிரச்னை தீர்ந்தால் பொருளாதார நெருக்கடி நீங்கும்

## அனுர பிரியதர்ஷன யாப்பா சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 16

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டுமாயின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு முதலில் தீர்வு எட்டப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு பொது இணக்கப்பாட்டுடன் தீர்வு காண்பது அவசியமாகும். இனப்பிரச்னைக்கு தீர்வுகாண குறுகிய கால அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது எனவும் அவர் கூறினார்.

அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த செவ்வாய்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை குறித்து ஊடகங்க



ளுக்கு கருத்துரைக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய ரீதியான பிரச்னைக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது குறுகிய கால அடிப்படையில் தீர்வு காண இணக்கப்பாடு எட்டப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் அரசியலமைப்பினை அடிப்படையாக கொண்டு அரசியல் தீர்வு விவகாரத்தில் தீர்வு காணப்படவேண்டும்.

தேசிய பிரச்னைக்கு தீர்வு எட்டப்படவேண்டிய தருணம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது. ஆகவே சகல தரப்பினரது ஒத்துழைப்பு இதற்கு அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாக கருதி தீர்வு காண இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் அடிப்படை பிரச்னைகளுக்கு முதலில் தீர்வு எட்டப்பட வேண்டும்-என்றார். (அ)

# சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி வவுனியா இளைஞர் பலி!

வவுனியா, டிசெ. 16

வவுனியா, குடாகச்சிக் கொடியவில் சட்டவிரோத மின் வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். அந்த இடத்தில் இருந்து நாட்டு துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக மடுகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.



நேற்று முன் தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடாகச்சிக்கொடிய, மானேரிக் குளம் பகுதியில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக சென்ற குறித்த இளைஞர் அங்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

குடாகச்சிக்கொடிய மேதாமாவத்தையைச் சேர்ந்த 25 வயதுடைய உமேஸ் லக்சன் என்கிற இளைஞரே இவ்வாறு பலியானார்.

இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மடுகந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சாவகச்சேரி விடுதி ஒன்றில் 8 அடி நீளமான முதலை மீட்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 16

சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் எட்டு அடி நீளமான முதலை ஒன்று மக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள விடுதி வளாகத்துக்குள் குறித்த முதலை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த பகுதி மக்களால் பிடிக்கப்பட்ட முதலை யாழ் வனவிலங்கு பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

# கைதடியில் நாவலர் விழா

யாழ்ப்பாணம், டிசெ. 16

கைதடி சைவ ஐக்கிய சங்கமும் இணுங்கித்தோட்ட கந்தசுவாமி கோவிலும் இணைந்து நடத்திய நாவலர் விழா நேற்று முன் தினம் மாலை இணுங்கித் தோட்ட கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் அ. லோகநாதனும் கலந்து கொண்டனர்.

நாவலர் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு



நிகழ்வும் நடைபெற்றது. (அ)

# ஜி-20 குழுவிடமிருந்து இலங்கைக்கு நன்மை பெற இந்தியாவுடன் பேச்சு

இந்தியாவின் அயல் நாடான இலங்கைக்கு ஜி-20 குழுவின் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வது குறித்து, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட இந்தியாவுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான ஜி-20 நாடுகளின் தலைமையை இந்தியா ஏற்றுள்ளது. இந்நிலையில் இந்தியாவின் ஒருங்கிணைப்பாளராக செயல்படும் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவுடன் மிலிந்த மொறகொட சந்திப்பை நடத்தியுள்ளார்.

ஜி 20 நாடுகளில், அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, ஜப்பான், ஜேர்மனி, கனடா, ரஷ்யா உட்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த நிலையில், சர்வதேச நிதி ஒத்துழைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்புக்கான ஜி-20 அணுகுமுறையைப் புரிந்து கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மொறகொடவும், ஷ்ரிங்லாவும் கலந்துரையாடியுள்ளனர். (ஐ)

# முகாமைத்துவத்தில் முதல் நிலை பெறும் மாணவருக்கு இலங்கை வங்கியின் விருது

## யாழ்.பல்கலையுடன் உடன்படிக்கை கைச்சாத்து




யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வழங்கப்படும் தொழில் நிருவாகமாணி, வணிகமாணி ஆகிய இரண்டு பட்டப் படிப்புகளிலும் முன்னணி பெறும் மாணவர்களுக்கு வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை வங்கியினால் "இலங்கை வங்கி விருது" வழங்கப்படவுள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு, நேற்று வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், இலங்கை வங்கியின் சார்பில் அதன் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் வி. சிவானந்தனும் ஒப்பமிட்டனர். விருதுக்கான வைப்புச் சான்றிதழ் பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்களும், இலங்கை வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் வங்கியியலாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி ஆகிய பட்டங்களைப் பெறும் மாணவர்களில் முதனிலை பெறும் மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப் பதக்கத்தையும், சான்றிதழையும் வழங்குவதற்கென இலங்கை வங்கியினால் ரூபா பத்து இலட்சம் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் இலங்கை வங்கி விருதுக்கான தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. (அ)

## வெறுமனே....

உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசு கட்சி தொழில்நுட்ப ரீதியாக தனித்து கேட்பது தொடர்பாக சிந்தித்து வருவதாக சுமந்திரன் எம். பி. யாழ்ப்பாணத்தில் நேற்றும் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். அத்துடன், பங்காளிக் கட்சிகளுடன் பேசியே முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்) முன்னதாக, அவர் இந்தக் கருத்தை வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் வலியுறுத்தியிருந்தார். அவரின் இந்தக் கருத்து சர்ச்சையை உருவாக்கியிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் ஈழநாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தனை தொடர்பு கொண்டு கேட்டது. இதற்கு பதிலளித்த அவர்,

“இந்த விடயம் தொடர்பாக முன்னர் சுமந்திரன் என்னுடன் கலந்துரையாடியிருந்தார். கடந்த உள்ளூராட்சி தேர்தல் (2018) முடிவுகளைத் தொடர்ந்து இது பற்றி கதைத்தோம். ஆனால், அது எழுந்தமானதாக கதைக்கப்பட்டதே தவிர, சாதக - பாதகங்களை அலசி ஆராயப்பட்டது அல்ல. 2018 தேர்தலில் தொங்கு சபைகளையே அமைக்க முடிந்தது. இதனால், பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. நாம் மட்டும் இந்தப் பாதிப்புகளை எதிர்கொள்ளவில்லை. தேசிய கட்சிகளும் பாதிக்கப்பட்டன. இதற்கு தேர்தல் முறைமையில் விகிதாசாரத்துக்கு அதிக இடம் ஒதுக்கப்பட்டமையே காரணம். எனவே தான், தந்திரோபாயமாக பிரிந்து தேர்தலை சந்திப்பது குறித்துப் பேசினோம்.

ஆனால், இதற்கு தற்போது அவசியம் எழாது என்று கருதுகிறோம். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை அரைவாசியாக - 4 ஆயிரமாகக் குறைப்பது தொடர்பில் பேசப்படுகிறது. தேர்தல் முறைமை மாறினால், அதற்கு அவசியம் எழாது.

எது எப்படி இருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே நாம் தேர்தலை சந்திப்போம். தந்திரோபாயத்துக்காக தேர்தலை தனித்து சந்திப்பது என்றாலும் அது குறித்து விரிவாக பங்காளி கட்சிகள் அனைத்தும் கூடி ஆராய்ந்தே முடிவு எடுப்போம். அது தமிழினத்தை பாதிக்காததாகவே இருக்கும். வெறுமனே தேர்தல் வெற்றிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலை பிரிந்து சந்திக்காது - என்றும் கூறினார்.

இதேவேளை, ரெலோ கட்சியின் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவிக்கையில்,

தனித்துக் கேட்கும் முடிவை தமிழரசு கட்சி தனியாக முடிவு எடுக்காது - கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என்று சுமந்திரன் எம். பி. கூறியுள்ளார். எனவே, அப்படி கலந்துரையாடி முடிவு எடுக்கும் போது நாம் எமது முடிவை தெரிவிப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே நாம் தேர்தலை எதிர்கொள்வோம். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மட்டும் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படவில்லை. தமிழினத்தின் நன்மைக்காக நாம் ஒன்றிணைந்தே செயல்படுவோம் - தேர்தல்களை சந்திப்போம் - என்றார். (ஐ)

## மருத்துவர்களின்....

வயது எல்லையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது **63** வயதை பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் எதிர்வரும் **31** ஆம் திகதி ஓய்வு பெற வேண்டும். **62** வயதை பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் **63** வயது நிறைவடையும்போது ஓய்வு பெற வேண்டும். **61** வயது பூர்த்தியடைந்துள்ளவர்கள் **62** வயது பூர்த்தியாகும்போது ஓய்வு பெற வேண்டும்.

இதன்போது, **60** வயது பூர்த்தியடைந்த மருத்துவர்கள் **61** வயது பூர்த்தியடையும் போது ஓய்வு பெற வேண்டும். **59** வயது பூர்த்தியடைந்துள்ள மருத்துவர்கள் **60** வயது பூர்த்தியடையும்போது ஓய்வு பெற வேண்டும்

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜூன் **30**ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் பிறந்த தினத்தைக் கொண்ட மருத்துவர்கள் குறித்த வருடத்தின் ஜூன் மாதம் **30**ஆம் திகதி வரை சேவையை தொடர முடியும்.

இதேபோன்று ஜூலை முதலாம் திகதியிலிருந்து டிசெம்பர் **31** ஆம் திகதிக்கு இடைப்பட்ட கால வரையறைக்குள் பிறந்த தினத்தைக் கொண்டவர்கள் குறித்த வருடத்தின் டிசெம்பர் **31**ஆம் திகதி வரை சேவையை தொடர முடியும்.

இந்த புதிய திருத்தங்கள் அடுத்த ஆண்டு டிசம்பர் **31** ஆம் திகதி வரை மாத்திரம் அமுலில் இருக்கும் என்று பொது நிர்வாக அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாங்கள்....

மாக பரந்துபட்ட அமைதியின்மை ஏற்பட்டதை தொடர்ந்து கடந்த ஜூலையில் கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

**40.6** பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனில் சிக்குண்டுள்ள இலங்கைக்கு மேலதிக நிதி உதவி அவசரமாக தேவைப்படுகின்றது. இலங்கை தனது கடனில் **22** வீதத்தை சீனாவுக்கு செலுத்த வேண்டியுள்ளது. செப்ரெம்பரில் இலங்கை **2.9** மில்லியன் டொலர் நிதியுதவி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியது. அடுத்த வருடம் இந்த நிதிஉதவி கிடைக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் நிதி உதவிக்கு அப்பால், நாங்கள் ஏனையவர்களிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கின்றோம். சர்வதேச தரப்புகளிடமிருந்து நான்கு - ஐந்து பில்லியன் டொலர்களை எதிர்பார்க்கின்றோம். ஜனாதிபதி நாட்டின் சில அரசநிறுவனங்களை மறுசீரமைப்பது குறித்து ஆர்வமாக உள்ளார். இதன் மூலம் இரண்டு அல்லது மூன்று பில்லியன் டொலரை திரட்டமுடியும். அத்துடன், திறைசேரியையும் அந்நிய செலாவணி கையிருப்பையும் வலுப்படுத்த முடியும்.

சர்வதேச நாணய நிதியத்துக்கான கடனுக்கு அதன் நிறைவேற்று சபை டிசெம்பர் மாதத்துக்குள் அங்கீகாரமளிக்கும் என இலங்கை எதிர்பார்த்தது. எனினும், இது ஜனவரியிலேயே சாத்தியமாகும்.

இலங்கை தனக்கு அதிகளவு கடன்களை வழங்கிய சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளிடமிருந்தும் தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்தும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உத்தரவாதங்களை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அதிகளவு கடனை வழங்கிய சீனா மற்றும் இந்தியாவிடமிருந்து உத்தரவாத கடிதங்களுக்காக இலங்கை காத்திருக்கின்றது.

இந்த இரு நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்துள்ளன. இலங்கை அவைகளுடன் தரவுகள் மற்றும் ஆவணங்களை பகிர்ந்துகொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துக்கும் - எமது சர்வதேச சகாக்களுக்கும் - எங்கள் இரு தரப்பு நண்பர்களுக்கும் நாங்கள் பொறுமையிழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை தெரிவித்துள்ளோம். இலங்கையர்களின் நன்மைக்கும் உலக பொருளாதாரத்தின் நன்மைக்கும் இது அவசரமான விடயம்.

முன்னர் **70**வீதமாக காணப்பட்ட பணவீக்கம் நவம்பரில் **61** வீதமாகக் காணப்பட்டது. ஆனால், பொருளாதாரம் இந்த வருடம் **8.7** வீதத்தால் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பின்னர் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். அடுத்த வருடத்தின் முதல் காலாண்டை சர்வதேச நாணய நிதியத்தினதும் சர்வதேச அமைப்புகளினதும் கடன் உதவிகளுடனும் ஆரம்பிக்க வேண்டும். ஆனால், **2024**லேயே பொருளாதார வளர்ச்சி ஏற்படும் - என்றும் கூறினார். (ஐ)

## 4 வயது....

போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட சிறுவன் தகாத வார்த்தை பயன்படுத்தினார் என்பதால் இவ்வாறு செய்தார் என்றும், சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று சங்கானை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ)

## பாடசாலைகளில்....

டுக்கப்படும்.

கடுமையான தீர்மானங்களை எடுக்காவிட்டால் மாணவர்களின் எதிர்காலம் சீரழிந்து போகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், கோவிட் பெருந்தொற்று தாக்கம் பாடசாலை மாணவர்களின் கல்வியில் மாத்திரமல்ல, மாணவர்களின் ஒழுக்கத்திலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

கோவிட் தொற்று மற்றும் நாட்டின் அசாதாரண பொருளாதார காரணிகளால் பாடசாலை மாணவர்களுக்கு அதிகம் விடுமுறை வழங்கப்பட்டது. மாணவர்கள் எவ்வித கண்காணிப்பும் இல்லாமல் அதிக நேரம் சுதந்திரமாக இருக்கும் சூழல் காணப்பட்டது. இவ்வாறான பின்னணியில் பெரும்பாலான மாணவர்கள் தவறான வழியில் சென்றுள்ளார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் ஒரு பிரதேசத்தின் தன்மை பிறிதொரு பிரதேசத்தில் கிடையாது. ஒரு பிரதேசத்தில் பல்வேறு வியாபாரங்கள் இடம்பெறுகின்றன. இந்த பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமல் வீட்டில் இருக்கும் போது அவர்கள் போதைப்பொருள் உட்பட தவறான செயல்பாடுகளில் ஈடுப்பட்டுள்ளார்கள்.

தற்போது நிலைமை மாறிவிட்டது. நகர்புறம் முதல் கிராமம் வரை பிரபல்யமான போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தீவிரமடைந்துள்ளது.

கோவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள். ஐஸ் போதைப்பொருள் விற்பனை பாடசாலை மாணவர்களை இலக்காக கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதுவரை **81** பாடசாலை மாணவர்கள் ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி, புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். வெளிவராத பல தகவல்கள் இருக்க முடியும்.

**10** வருடங்களுக்கு முன்னர் மாணவர்களின் கல்வி மற்றும் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவை தொடரபில் அவதானம் செலுத்துவது கல்வி அமைச்சின் தலையாய கடமையாக இருந்தது. ஆனால் தற்போது போதைப்பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாப்பது பிரதான பொறுப்பாக உள்ளதுடன், சவால்மிக்கதாகவும் உள்ளது.

பாடசாலைகளை இலக்காக கொண்ட போதைப்பொருள் விற்பனையை ஒழிக்க பாதுகாப்பு தரப்பினரது ஒத்துழைப்பை கோரியுள்ளோம். இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை செயற்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சு,பாதுகாப்பு அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு, சமுதாய பொலிஸ் சேவைகள் ஆகிய தரப்பினரை ஒன்றிணைத்து எதிர்வரும் **2** ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளை மையப்படுத்திய செயற்திட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## விபத்தில்....

சடலம் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் உறவினர்கள் எவரும் சடலத்துக்கு உரிமை கோரப்படாத காரணத்தால் தருமபுரம் மருத்துவமனையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 17 அரச....

தப்பட வேண்டும் என உப குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பணத்தை அதிகமாக அச்சிட்டமையினால், பணவீக்கம் ஏற்பட்டமையை அனைவரும் அறிவார்கள். இதனால் வட்டி விகிதங்கள் அதிகரித்தன. திறைசேரி பற்றுச்சீட்டுகளுக்கு **33** தொடக்கம் **37** வீதம் வரை செலுத்தப்படுகிறது. இதனால் இன்று வர்த்தகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வியாபாரிகள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். சுற்றுலா, புனர்நிர்மாணம், மின்சக்தி மற்றும் எரிசக்தி ஆகிய மூன்று துறைகளும் அண்ணளவாக **2** இலட்சம் கோடி ரூபாய் பெறுமதியான கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது - என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார். (ஐ)

## ஈஸ்டர்....

அமைய ஜனாதிபதிக்கு அதற்கான விடுபாட்டு உரிமை உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள், நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குகளில் இரண்டாவது பிரதிவாதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த வழக்குகளின் அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிரான விசாரணைகளை ஒத்திவைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோர் விடுத்த வேண்டுகோளை நீர்கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி நிராகரித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தவிர்ந்த ஏனைய பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணையை தொடருமாறும் மேலதிக மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## கோட்டாபயவை....

நிலைமையைத் தனக்கு சாதகமாக பயன்படுத்துவதற்கு அவர் திட்டம் தீட்டினார்.

பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்து கோட்டாபய பதவியை விட்டு ஓடினால் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாகும் திட்டம் ஒன்றை பஸில் வகுத்திருந்தார். அதற்காவே இரசாயன பசளைக்கான தடைக்கு அவர் அனுமதி வழங்கினார்.

இரசாயனப் பசளைக்கான தடை எந்தளவு விளைவை நாட்டில் ஏற்படுத்தும் என்று தெரிந்தும்கூட பஸில் அதற்கு அனுமதி வழங்கினார். அதேபோல், எரிபொருள் நெருக்கடி வந்தபோது **14** மணி நேர மின்வெட்டுக்கு பஸில் அனுமதி வழங்கினார்.

இவை அனைத்தும் நாட்டில் பெரும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தும். அதனூடாகக் கோட்டாபய பதவியை விட்டு ஓடுவார் என்று பஸில் அறிந்து வைத்திருந்தார்.

அப்படி நடந்தால் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாவதுதான் பஸிலின் திட்டம். ஆனால், இடையில் வந்து ரணில் விக்கிரமசிங்க புகுந்து கொண்டதால் எல்லாம் பிழைத்துவிட்டது” - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu



## தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார் கேன் வில்லியம்சன்!

வெலிங்டன், டிசெ. 16

நியூசிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைமை பொறுப்பில் இருந்து கேன் வில்லியம்சன் விலகியுள்ளார். அவர் ஒருநாள் மற்றும் இருபது -20 அணிகளை தொடர்ந்து வழிநடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ள நிலையில் அவர் விலகியுள்ளார் என்று நியூசிலாந்து கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

32 வயதான கேன் வில்லியம்சன் கடந்த 2016ஆம் ஆண்டு நியூசிலாந்தின் அனைத்து வடிவ கிரிக்கெட் அணிகளுக்கும் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் தலைமையிலான நியூசிலாந்து அணி சிறப்பாக செயல்பட்டு வந்தது. கடந்த 2021 ஐ. சி. சியின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை அவர் தலைமையிலான அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், அவர் டெஸ்ட் தொடரில் இருந்து வெளியேறி உள்ளார். நியூசிலாந்து அணி பாகிஸ்தான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரில் அந்த அணியின் தலைவராக அனுபவ வீரர் ரிம் சௌதி செயல்படவுள்ளார்.

தொடர்ந்து ஒருநாள் மற்றும் டி20 அணியை வில்லியம்சன் வழிநடத்துவார் என நியூசிலாந்து கிரிக்கெட் தெரிவித்துள்ளது. அந்த அணியின் உப தலைவராக ரொம் லதாம் செயல்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 100 மீற்றர் தூரத்துக்கு சிக்ஸர் அடித்த உமேஷ்

சட்டோகிராம், டிசெ. 16

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி வீரர் உமேஷ் யாதவ் 100 மீற்றருக்கு சிக்ஸர் விளாசி அசத்தியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி வங்கதேச நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. தற்போது இரு அணிகளும் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன.

சட்டோகிராமில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இனிங்ஸில் 404 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது.

அரைச்சதம் கடந்த அஸ்வின் ஆட்டமிழந்ததும், களத்துக்கு வந்தார் உமேஷ் யாதவ். அவர் எதிர்கொண்ட இரண்டாவது பந்தில் மிட் விக்கெட் திசையில் சுமார் 100 மீற்றருக்கு சிக்ஸர் விளாசி மிரட்டினார்.

அந்த ஓவரை மெஹதி ஹசன் வீசியிருந்தார். பின்னர் மீண்டும் ஒரு சிக்ஸர் விளாசி இருந்தார் அவர். முதல் இனிங்ஸில் 10 பந்துகளை எதிர்கொண்டு மொத்தம் 15 ஓட்டங்கள் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:

## மொராக்கோவை வீழ்த்தி இறுதிக்கு பிரான்ஸ் தகுதி!



டோஹா, டிசெ. 16

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நடப்பு சம்பியனான பிரான்ஸ் அணி மீண்டும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்ற நள்ளிவு 12.30 மணிக்கு டோஹாவின் அல் பேத் மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான பிரான்ஸ் அணி, முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த மொராக்கோ அணியை எதிர்கொண்டது.

உலகக் கிண்ண வரலாற்றில் முதன்முறையாக அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றமொராக்கோ அணி மீதும், நடப்பு சம்பியனான பிரான்ஸ் மீதும் சமமான எதிர்பார்ப்பு நிலவியது.

அந்தப் பரபரப்புக்கு பஞ்சம் வைக்காமல், ஆட்டத்தின் 5ஆவது நிமிடமே பிரான்ஸ் வீரர் தியோ ஹெர்னாண்டஸ் முதல் கோல் அடித்து அசத்தினார்.

ஆரம்பமே பிரான்ஸ் தனது தாக்குதலை தொடங்க, மொராக்கோவால் இதை சமாளிக்க முடியவில்லை. சொல்லப்போனால், நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் மொராக்கோ எதிரணியின் கோலை விட்டுக்கொடுத்தது இதுவே முதன்முறை. இதுவரை எந்த அணியும் நடப்பு தொடரில் மொராக்கோவுக்கு எதிராக கோல் அடிக்கவில்லை. அந்த அளவுக்கு பிரான்ஸ் அதிரடியாக ஆரம்பித்தது.

தடுப்பாட்டப் பலம்மிக்க மொராக்கோ, பிரான்ஸின் அதிரடி தாக்குதல் பாணியில் இருந்து மீள பல முயற்சிகளை எடுத்தது. ஆனால், எதுவும் கைகொடுக்கவில்லை. மாறாக, ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கோலோ முவானி கோல் அடிக்க அந்த அணி 2 -0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இறுதியில் மொராக்கோ தோல்வியை தழுவ, நடப்பு சம்பியனான பிரான்ஸ் அணி மீண்டும் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

உலகக் கிண்ணத்தின் கடைசி ஏழு பதிப்புகளில் (1998, 2006, 2018 மற்றும் 2022) பிரான்ஸ் நான்கு முறை இறுதிப் போட்டிக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவை எதிர்கொள்ளவுள்ளது பிரான்ஸ்.

இறுதிப்போட்டியில் பிரான்ஸ் வெல்லும்பட்சத்தில் தொடர்ச்சியாக இரண்டு முறை உலகக்கோப்பை வென்ற அணி வரிசையில் இணைந்து சாதனை படைக்கும். (ஐ)

## இந்தியா 404 ஓட்டங்கள் குவிப்பு; தடுமாறுகின்றது பங்களாதேஷ்!



சிட்டோகிராம், டிசெ. 16

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா முதல் இனிங்ஸில் சகல விக்கெட் களையும் இழந்து 404 ஓட்டங்களை குவித்துள்ளது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி 133 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

பங்களாதேஷுக்கு சென்றுள்ள இந்திய அணி தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

நேற்று முன்தினம் சிட்டோகிராமில் ஆரம்பமான முதல் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத் தாடியது. ஆரம்ப வீரர்களான கே. எல். ராகுல், ஷுப்மன் கில் சிறப்பாக தொடங்கியபோதும், அவர்களால் தொடர்ந்து ஜொலிக்க முடியவில்லை.

41 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது ஷுப்மன் கில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த புஜாரா நிலைத்து ஆட, மறுமுனையில் ராகுல் 22, கோலி ஓர் ஓட்டம் என்று அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர்.

தடுமாறிய இந்திய அணிக்கு புஜாரா - ரிஷப் பந்த், புஜாரா - ஸ்ரேயாஸ் ஐயர் இணை உதவியது. ரிஷப் பந்த 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க, மறுமுனையில் நிலைத்து ஆடிய புஜாரா 90 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து, ஸ்ரேயாஸ் ஐயர் 86 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

பிறகு களம் வந்த, அஸ்வின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அரைச்சதம் கடந்த அவர் 58 ஓட்டங்களையும், குல்தீப் யாதவ் 40 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், இந்தியா 404 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் தையுல் இஸ்லாம், மெஹிடி ஹசன் மிராஸ் ஆகியோர் தலா 4 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இனிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி காத்திருந்தது.

தொடக்கம் கொடுத்த நஜ்முல் ஹுசைன் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். தொடர்ந்து, யசீர் அலி 4, லிற்றன் தாஸ் 24, சகீர் ஹசன் 20, சகீப் அல்ஹசன் 3, முஸ்பிஹுர் ரகீம் 28 என்று விக்கெட்களை இழக்கவே 44 ஓவர்களுக்கு 133 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இந்தியாவின் பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்களையும், முஹமட் சிராஜ் 3 விக்கெட்களையும் சாய்த்தனர். இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும்.

## கண்டியிடம் வீழ்ந்தது யாழ்ப்பாணம் கிங்ஸ்



அம்பாந்தோட்டை, டிசெ. 16

யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியை கண்டி பல்கன்ஸ் 10 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

எல். பி. எல் இருபது - 20 தொடர் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ், கண்டி பல்கன்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி பல்கன்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 160 ஓட்டங்களை எடுத்தது.

அந்த அணிக்காக, பாபியன் அலன் 47, அண்ட்ரே பிளெட்சர் 35, அசன் பண்டார 24 ஓட்டங்களை எடுத்தனர்.

யாழ்ப்பாணம் அணியின் பந்துவீச்சில் டுனித் வெல்லாலகே, டில்சான் மதுசங்க, வாகார் சலாம்கெலி ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணிக்கு அவிஸ்க பெர்னாண்டோ 33, சதீர சமரவிக்கிரம 48 ஆகியோரே அதிக ஓட்டங்களை எடுத்தனர். ஏனைய வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. இதனால், 20 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 9 விக்கெட்களை இழப்புக்கு 150 ஓட்டங்களைப் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கண்டி அணியின் பந்துவீச்சில், கார்லஸ் பிராத்வெயிட் 4, வனிந்து ஹசரங்க 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.